விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 13 செவ்வாய்க்கிழமை (25.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 68

### ஓமந்தையில் பேருந்து - பஜிரோ கோர விபத்தில்

## காரைநகர் பிரபல வர்த்தகரும் அவரது குடும்பத்தை சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் உயிரிழப்பு


இ.சோமசுந்தரம் (வயது - 83)


ஆ.தேவராஜா (வயது - 62)


தே.சுகந்தினி (வயது - 51) தே.சுதர்சன் (வயது - 30)


சாரதி வி.றொசாந்தன் (வயது - 24)

*(வவுனியா)* வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பேருந்து - பஜிரோ கோர விபத்தில் காரைநகர் பிரபல வர்த்தகரும் அவரது குடும்பத்தை சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர்

காரைநகர் பகுதியைப் பிறப்பிடமாக கொண்ட ஒரே குடும்ப ங்களைச் சேர்ந்தவர்களான இ.சோமசுந்தரம் (வயது-83), ஆ.தேவராஜா (வயது-62), தே.சுகந்தினி (வயது-51), தே.சுதர்சன் (வயது 30) ஆகியோரும் வாகனச் சாரதியான வி.றொசாந்தன் (வயது24) என்பவர்களே உயிரிழந்தவர்களாவார். (ம-10)

### மருதனார்மடத்தில் உள்ள தனியார் விடுதி

## இராணுவத்தினரால் திடீர் சுற்றிவளைப்பு

### 50க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது

*(யாழ்ப்பாணம்)* மருதனார்மடம் பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று இரவு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பையடுத்து 50க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். *(23ஆம் பக்கம் பார்க்க)*

5 ரூபாயினால்

### பாணின் விலையை குறைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைக்க அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. 23

மூளைக்காய்ச்சல்

### கிராமசேவகர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மூளைக் காய்ச்சல் காரணமாக இளம் வயது 23

ஜனாதிபதி கோட்டா உத்தரவு

### கொழும்பில் குவிக்கப்பட்ட இராணுவப் பொலிஸார்

(கொழும்பு)

கொழும்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக இராணுவ பொலிஸார் போக்குவரத்து கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய நேற்று 23

### மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குக மார்ச் 8இல் முல்லையில் மாபெரும் கவனயீர்ப்பு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 முல்லையில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் மகளிர் தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க தீர்மானித் திருப்பதாகவும் தமது போராட்டத்துக்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறும் வலிந்து காணாமல் ஆக்கபட்டவர்களது உறவுகள் கோரிகைை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் நேற்று வட்டுவாகல் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. 23

### கொள்கை மற்றும் தொலைநோக்கு திட்டம் ஐ.தே.கவிடம் இல்லை

அநுரகுமார திசாநாயக்க

(கொழும்பு)

கொள்கை மற்றும் தொலைநோக்கு திட்டங்கள் இன்மையே ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஒற்றுமை மற்றும் தேசியம் தொடர்பான பிரச்சினைக்கு பிரதான காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் 23

### தம்புள்ளைக்கு கடத்தப்படவிருந்த

6 கிலோ கஞ்சா யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளைக்கு கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த 23

### மதவாச்சி குஞ்சுக்குளம் சோதனைச் சாவடியில்



ஒரு தொகை கஞ்சாப் பொதி மீட்பு

(மன்னார்)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி (மன்னார்) குஞ்சுக்குளம் சோதனைச 23

### இலங்கை அரசை இழிவுபடுத்தவே

## இராணுவத்தினருக்கு எதிராக ஜெனிவாவில் குற்றச்சாட்டு

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவானவர்கள் இலங்கை பாதுகாப்பு படைகள் மற்றும் உள 23

### இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது

ஆட்கொணர்வு மனு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)


இறுதிப்போரின்போது, முல்லைத்தீவு - வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையை, ஏப்ரல் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

குறித்த ஆட்கொணர்வு மனு மீதான இரண் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25 – 03 – 1945



உதிர்வு
08 – 03 – 2019

## அமரர் ஆழ்வார் கந்தசாமி

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு பெற்ற
இ.போ.ச. களஞ்சிய பொறுப்பாளர், உரிமையாளர்–தீபன்களஞ்சியம்)
திதி:– 25.02.2020

அன்பான அப்பாவே! ஓராண்டு பறந்தோடியது
தங்கள் திருமுகம் கண்டு என்றும் தங்கள் பசுமை நிறைந்த
நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
என்றென்றும் ஒளிவிளக்காய் நின்று வழிகாட்டியாக இருந்து அருள்புரிவீராக

சம்பந்தன் கடையடி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி

(C-9330)

**குடும்பத்தினர்**


பாடசாலைமாணவர்களுக்கு,
யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்
ஒழுங்குபடுத்தும் அறிவியல்நிகழ்ச்சி

ஒளிரும் எதிர்காலத்திற்கான விஞ்ஞானக் கல்வி
Science Education for Bright Future

தரம் 6 தொடக்கம் 11 வரையானவிஞ்ஞான பாடப் பரப்புக்களில்

- காட்சிப்பொருட்கள்
- பரிசோதனைகள்
- கலந்துரையாடல்கள்
- விளக்கவுரைகள்
- மேலும் பல ...

- தாவரவியல்
- விலங்கியல்
- இரசாயனவியல்
- பௌதிகவியல்
- கணனிவிஞ்ஞானம்

இடம்: • விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்

காலம்: • மார்ச் 04 – 07, 2020 (காலை 8.00 - மாலை 6.00)



- நுழைவுச்சீட்டுக்களை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- பார்வையிட வரும் நாளையும், பார்வையாளர்களின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்
- நிகழ்ச்சி நடைபெறும் நாட்களில், காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை நுழைவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும்.

ஒவ்வொரு நாளுக்கும் குறித்த எண்ணிக்கையான நுழைவுச்சீட்டுக்களே ஒதுக்கப்பட்டுள்ளதால்,நிகழ்ச்சித் திகதிவரை காத்திராமல், முற்கூட்டியே உங்கள் நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்.

அனைத்து மாணவர்களையும், ஆர்வமுள்ள அனைவரையும்
யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட சமூகம் அன்புடன் வரவேற்கின்றது.

தொடர்புகளுக்கு: பீடாதிபதிஅலுவலகம், விஞ்ஞானபீடம், யாழ்பல்கலைக்கழகம்
☎: 021-222-2685 ✉: scienceuoj@univ.jfn.ac.lk


# இறுதி வணக்கம்

## குழந்தைவேலு கிட்ணசாமி

**(இளைப்பாறிய உதவிப்பொறியியலாளர்-பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல முகாமைக்குழு உறுப்பினர், சமூகசேவையாளர்)**



பூநகரி ஞானிமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தற்போது கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் (இல 193/3 விவேகானந்தர் கிழக்கு) கொண்ட அமரர் குழந்தைவேலு கிட்ணசாமி அவர்கள் 22.02.2020 அன்று காலமானார்.

அன்னார் குழந்தைவேலு - பரந்தன் பொன்னு இணையரின் கடைசி மகனும்,அன்னலட்சுமி அவர்களின் அன்புக்கணவரும் கனடாவில் வசிக்கும் சுமதி, கோமதி, சுவிற்சர்லாந்தில் வசிக்கும் நந்தினி, மஞ்சுனாமதி, ஜேர்மனியில் வசிக்கும் தயாமதி, இங்கிலாந்தில் வசிக்கும் யசோதா ஆகியோரின் அன்புத்தந்தையும் கனடாவில் வதியும் பஞ்சரத்தினம், இறமணன், சுவிஸ்லாந்தில் வதியும் முருகவேள், கமலநாதன், ஜேர்மனியில் வதியும் நித்தியானந்தன், இங்கிலாந்தில் வதியும் சிவசங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும் தட்சா, கவிதன், அருளினி, அம்பலன், கீர்த்தனன், கீதாஞ்சலி, பிரகாசு(ஸ்), பிரபா, அஞ்சனா, ஆதிரா, சௌமியா, கோபிகா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற இராசம்மா பொன்னம்பலம், குழந்தைவேலு சுப்பிரமணியம், குழந்தைவேலு நாகேந்திரம் ஆகியோரின் அன்பு உடன்பிறந்தவரும், பூநகரி நாலாம் கட்டையில் வசிக்கும் இணையர் இராமசாமி வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்புமிகு தம்பியும் சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட நாகேசு பரமராசா, கந்தசாமி சந்திரமலர், உருத்திரன் நாகேசுவரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இவருக்கான அமங்கல வழிபாட்டு நிகழ்வுகள் நாளை(26.02.2020) புதன் கிழமை(அறிவன்கிழமை) முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று கிளிநொச்சி இரணைமடு இடுகாட்டில் உடலிற்கு தீயிடல் நிகழ்வு நடைபெறும்.இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பூநகரியிலிருந்து இறுதிமரியாதை நிகழ்வில் பங்குகொள்ளும் உறவினர், நண்பர்களுக்கான பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.காலை 8.30 மணிக்கு சித்தங்குறிச்சி சர்மிலா இரகுநாதன் இல்லத்திலிருந்து புறப்பட்டு ஏனைய பகுதி மக்களுக்காக 9 மணிக்கு வாடியடியிலிருந்து புறப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

தகவல்:-

ஞானிமடம், பூநகரி (c-9329) **பிள்ளைகள், மருமக்கள்**

### வலம்புரியை அச்சுறுத்தியது

# தமிழ் - இந்து மக்களுக்கு வேதனை தரும் நிகழ்வாகும்

## ஜெகதீஸ்வர குருக்கள் கவலை



(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகை மொழி மதங்களுக்குஅப்பாற்பட்ட பொதுநிலையில் உண்மையை யதார்த்தமாக வெளியிடும் செய்தி ஸ்தாபனமாகும்.

அரசியல் நிலையிலும் மத நிலையிலும் நடுவுநிலை பத்திரிகையாகும். அண்மையில் எழுவைதீவு மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் நிகழ்வுகளும் பாரம்பரியமான இந்து பெயர் பதித்த வீதிகளையும் இந்து பாடசாலை பெயர்களையும்கத்தோலிக்க பெயர்களாக மாற்றியமைக்க முற்பட்டமையை வலம்புரி பத்திரிகை தன் கடமையை செய்தி ஊடகம்என்ற வகையில்தமிழ் மக்களுக்கு வாசகர்களுக்கு வெளிக்கொணர்ந்தது தவறானதல்ல. இதை மையமாக வைத்து வலம்புரியை அச்சுறுத்தியமை இந்துக்களுக்கு வேதனை தரும்செயலாகும் என சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் கலாநிதி து.கு. ஜெகதீஸ்வர குருக்கள் தெரிவித்தார்.

மதங்கள் ஒவ்வொன்றும் மற்றைய மதங்களை மதித்து நடக்க வேண்டும்.மதிக்காமல் விட்டாலும் மதத்தை மிதிக்காமல் இருக்க வேண்டும். இது இந்துக்களின் கொள்கை. மற்றைய மதங்களுக்கோ இனங்களுக்கோ இந்துக்கள் தீங்கு இழைத்தவர்கள் அல்ல. தாங்கள் உண்டு தம் மதம் உண்டென்று வாழ்பவர்கள்.

இதனையே இந்து மத குருமார்களும் மதத் தலைவர்களும் கடைப்பிடித்து வருகின்றார்கள். இன்று ஏனைய மதத்தவர்கள் தமிழர்கள் மீது குறிப்பாக இந்துக்கள், இந்து ஸ்தாபனங்கள் மீது அவர்கள் வேதனைப்படும் படியாக செயற்படுவது அவ்அவ் மதநிலைகளில் கொள்கைகளுக்கு மாறுபட்டதாகும்.

வலம்புரிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் திருக்கேதீஸ்வர ஆலய வளைவு உடைப்பு போன்ற சம்பவங்கள் இனி நிகழாமலிருக்க கத்தோலிக்க மதத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று குருமார் ஒன்றியம் வேண்டுகின்றது.

இச் சம்பவங்கள் தொடர்கின்ற போது இன்று வீதிகளில் பெயர் மாற்றம், பாடசாலைகளில் பெயர் மாற்றம் நிகழ்வது போல இந்து சமய நிறுவனங்கள், மண்டபங்கள் போன்றவை கூட மத ஆதிக்கங்களால் உருமாறலாம். சைவ மக்களும் இந்து சமய அமைப்புக்களும் விழிப்புணர்வடைந்து ஒற்றுமையாக தங்கள் விழுமியங்களை, கலாசாரங்களை இறுக்கமாக பேணவும் வளர்க்கவும் முன்வரவேண்டும்.


வலம்புரிப்பத்திரிகை அதன் நிறுவனம் சார்ந்த ஊழியர்களும் தமிழ் இந்து மதம் சார்ந்து எல்லோரையும் இணைத்து நற்பணி செய்ய வேண்டும். அதற்கு அனைத்து இந்து அமைப்புக்களும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என அவர்மேலும் தெரிவித்தார்.(இ)

# வலம்புரியை அச்சுறுத்துவது நாமே எமது சுவாசத்தை நிறுத்துவதற்குச் சமம்!

## வாசுதேவக்குருக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகைக்கு அச்சுறுத்தல் விடும் விதத்தில் இடம்பெற்ற சம்பவம் அநாகரிகமான செயலாகும். ஊடகத்தை அச்சுறுத்துவது என்பது எமது மூச்சுக்காற்றை நிறுத்துவதற்குச் சமமாகும். யுத்தகாலத்திலும் சரி தற்போதும் சரி எமக்காக குரல் கொடுப்பது ஊடகங்களாகும்.



அதிலும் எம்மண்ணில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் எமது உணர்வுடன் வெளிவருவனவாகும். அந்தவகையில் வலம்புரி எமது சுவாசக்காற்றாக எமது மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கையில் அதற்கு எதிராக வன்முறையை தூண்டியிருப்பது எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத சம்பவமாகும் என வீணாகான குருபீட குரு முதல்வர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில், யுத்தகாலத்தில் ஊடகங்களுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் எமது இனத்திற்கு எதிரானதாக அமைந்திருந்தது. ஆனால் வலம்புரிக்கு நடந்த சம்பவம் இனவிடுதலைக்காக ஒன்றுபட்டிருக்கவேண்டிய நிலையில் மதம் சார்பாக நடத்தியிருப்பது அநாகரிகமாகத் தெரிகின்றது. யுத்தத்தின் பின்னர் எமது இனம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அது நாம் பின்பற்றும் சமய வாழ்வும் பற்றுறுதிமிக்க கலை, கலாசார நல்லொழுக்கவிழுமியங்களும் தான் காரணம்.

எமது சைவத்தினை காலத்திற்கு காலம் அந்நிய மதம்சார்ந்தோர் அழிப்பதும் எமது மக்களை தம் வசப்படுத்துவதும் நடந்து வருகின்ற செயலாக உள்ளது. அந்நியர் ஆட்சியில் எமது மதத்தினரை தமது ஆட்சியின் பலத்தினால் பெருமளவு மக்களை மதம்மாற்றி வைத்தனர். அவ்வேளையில் அதனை எதிர்ப்பதற்கு எம்மவரிடம் அதிகமான வலு இருக்கவில்லை.

காலத்திற்கு காலம் இது தொடர்ந்து வந்தது. அவ்வப்போது ஆறுமுக நாவலர் முதலான சமயத் தலைவர்கள் தோன்றி அதனை தடுத்தும் வந்தனர். தற்போது சைவத்தினை முற்றுமுழுதாக இல்லாது ஒழிப்பதற்கு நாற்புறமும் சதி செய்து வருகின்ற போது இதனை தடுப்பதற்கு ஒவ்வொரு சைவர்களும் முன்வருதல் வேண்டும்.

அந்தவகையில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, அளவெட்டி விநாசித்தம்பி ஆசிரியர் இன்னும் பல சைவச் சான்றோர்கள் வழியில் இன்றுதமதுவாழ்வை அர்ப்பணித்து சைவத்தினை பாதுகாப்பதற்கு தொண்டாற்றி வருகின்ற சமய தலைவர்கள் சைவசமய அமைப்புக்கள் சிவனடியார்களுக்கு வலம்புரிக்கு நடத்தப்பட்ட அநீதி மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கின்றது. அத்துடன் சகோதரத்துவ உணர்வுடன் வாழ்ந்து வரும் மக்களைப் பிளவுபடுத்துவதாகவும் அமைகின்றது.

ஒரு மதம் சார்பாக இடம்பெறும் அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தது வலம்புரி. வலம்புரி தர்மத்தின் வழியில் நின்று தனது கடமையைச் செய்தது. அதில் தவறு இருக்கும் சந்தர்ப்பத்தில் அதனைக் கேட்பதற்கு உரிமையுண்டு. ஆனால் அதற்காக வன்முறைகளை கையில் எடுப்பது பிழையான வழிப்படுத்தல் ஆகும். இதனை எவரும் ஏற்க மாட்டார்கள். எந்தவொரு மதமும் வன்முறைகளைப் போதிப்பதில்லை.

அவ்வாறு இருக்கையில் மதம் சார்பாக தமது கருத்தை தெரிவிப்பதற்கு வன்முறைகளை கையில் எடுப்பது தமது மதத்தின் கொள்கைகளை முதலில் தாமே கடைப்பிடிக்க மாட்டோம் என்பதையே வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

காலத்திற்கு காலம் விட்டுக் கொடுத்தல், அன்பு பாராட்டல், சகிப்புத் தன்மை முதலானவற்றால் தான் சைவம் இன்றும் சனாதன தர்மமாக போற்றப்பட்டு வருகின்றது. இதனைப் பிற மதத்தினர் தமக்குச் சார்பாகப் பயன்படுத்த முனைகின்றார்கள். எனவே வலம்புரிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான சம்பவங்கள் தொடராது இருக்க சமயத்தலைவர்கள் ஒன்று சேர்ந்து கலந்துரையாட வேண்டும்.

தமிழ்இனம்பூர்வீகமானது என்பதையும் நாம் பூர்வீகமாக வாழ்ந்த மண் எவை என்பதையும் இன்றும் அடையாளப்படுத்தி வருகின்ற சான்றாதாரங்களாக இருப்பது தமிழ்மன்னர்கள் கட்டிய ஆலயங்களும் மக்கள் பயன்படுத்திய சைவப் பாரம்பரிய பொருட்களும் வழிபாட்டு தெய்வங்களுமாகும் தமிழ்வேறு சைவம் வேறு அல்ல. இரண்டும் எமது இரண்டு கண்களைப்போன்றதாகும். சைவத்தைப் பாதுகாத்தால் தமிழ் வளரும். தமிழ் கலை, கலாசார விழுமியங்கள் வளரும். சைவம் மக்களால் பின்பற்றப்பட்டு வருவதனால் தான் தமிழ் இனம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் தமிழ் சைவம் தழைத்தோங்க வலம்புரி தொடர்ந்து தர்மத்தின் வழியில் பணி சிறக்கட்டும். வரும் இடர்களை சிவனார் களைவார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வலம்புரியை அச்சுறுத்தியமை அநாகரிகமான செயல் எந்தவிதமான நியாயத்தையும் கற்பிக்க முடியாது

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் உள்ளிட்ட ஐந்து அமைப்புக்கள் கூட்டாக கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகை நிறுவனம் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கையானது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

நாம் இன விடுதலையை வலியுறுத்தி நெடுங்காலமாகப் போராடி வரும் மக்கள். எமக்குள்ளே இருக்கக்கூடிய மதம், சாதியம் மற்றும் வர்க்க ஏற்றத் தாழ்வைக் கடந்து தமிழர் தேசத்தின் விடுதலை ஒன்றே இலக்கு என்று பல அர்ப்பணிப்புக்களோடு பயணித்தவர்கள்.

துரதிர்ஷ்டவசமாக அண்மைய காலத்தில் மத நல்லிணக்கம், சமூக ஒருமைப்பாடு தமிழர் தேசத்தின் ஐக்கியத்தை சீர்குலைக்கும் வகையில் அருவருக்கத்தக காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான பின்னணி பல நோக்கத்தின் பொருட்டு இடம்பெறுகின்றன என்பதை அவதானிக்க முடிகின்றது.

சிலருடைய தேர்தல் இலாபத்தை உள்நோக்கமாகக் கொண்டது. தமிழ்த் தேசத்தின் அரசியலை கரைக்கும்நோக்கம் கொண்டது.

தங்களுடைய மத மேலாதிக்கத்தை நிறுவ முற்படுகின்றவர்களின் உள்நோக்கம் கொண்ட கூட்டுச் செயற்பாட்டாக நகருகின்றதோ என்ற சந்தேகத்தை ஏற்புடுத்துகின்றது.

ஆகையால் இத்தகைய செயற்பாட்டை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அந்த வகையில் இன்னொரு மதத்தைச் சார்ந்தவர்களின் மனம் நோகும் படியோ அல்லது அவர்களை சீண்டும் வகையிலோ பிறிதொரு மதத்தைச் சார்ந்தவர்கள் நடந்து கொள்வதை எந்தவொரு உண்மையான ஜனநாயகவாதிகளாலோ மத நல்லிணக்கம் பேசுகின்றவர்களாலோ எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.


எனவே இவ்விடயம் தொடர்பான உண்மை நிலைமையை வெளிக்கொணர்ந்த வலம்புரிப்பத்திரிகை நிறுவனம் மீது அச்சுறுத்தல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு எவ்வித நியாயத்தையும் இந்தக் காரியத்தைச் செய்தவர்களால் கற்பிக்க முடியாது.

இத்தகைய அநாகரிகமான செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், மாவட்ட பூந்தளிர் பெண்கள் அமைப்பு, வடமராட்சி கிழக்குப் பிரஜைகள் குழு என்பன இணைந்து வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

# இந்தியாவை சுலபமாக வீழ்த்தி நியூசிலாந்து இமாலய வெற்றி

நியூசிலாந்து-இந்தியா இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் ஜெயித்த நியூசிலாந்து கேப்டன் கேன் வில்லியம்சன் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி, இந்திய அணி முதலில் பேட்டிங் செய்து 165 ரன்களில் சுருண்டது.

இதைத்தொடர்ந்து, நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்சில் 348 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. இந்தியா சார்பில் இஷாந்த் சர்மா 5 விக்கெட்டும், அஸ்வின் 3 விக்கெட்டும், பும்ரா, ஷமி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.



பின்னர் 183 ரன்கள் பின்தங்கிய நிலையில் தனது 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 3-வது நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 144 ரன்கள் எடுத்தது. ரகானே 25 ரன்களுடனும், விஹாரி 15 ரன்களுடனும் களத்தில் நின்றனர்.

இந்நிலையில் நேற்று 4-வது நாள் ஆட்டம் தொடங்கியது. போட்டி தொடங்கியது முதலே ஆதிக்கம் செலுத்திய நியூசிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் இந்திய வீரர்களின் விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தினர். இதனால் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 191 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் நியூசிலாந்து அணியை விட இரண்டாவது இன்னிங்சில் வெறும் 8 ரன்கள் மட்டுமே இந்திய அணி முன்னிலை பெற்றிருந்தது. சிறப்பாக பந்துவீசிய நியூசிலாந்து அணியின் சவுதி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து, 9 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 1.4 ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டியது. இதன் மூலம் இந்திய அணியை 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி நியூசிலாந்து அணி இமாலய வெற்றி பெற்றது.


இப்போட்டியில் சிறப்பாக பந்துவீசிய நியூசிலாந்து அணியின் வேகப்பந்து




வீச்சாளர் டிம் சவுதி ஆட்ட நாயகன் விருதை தட்டிச்சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளும் மோதும் கடைசி டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் உள்ள மைதானத்தில் வரும் 29-ம் தேதி நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## பெண்கள் ரி20 உலக கோப்பை இலங்கையை வீழ்த்தியது ஆஸ்திரேலியா




ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கான டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. நடப்பு சாம்பியனான போட்டியை நடத்தும் ஆஸ்திரேலியா முதல் ஆட்டத்தில் இந்தியாவிடம் தோல்வியடைந்திருந்தது.

இந்நிலையில் நேற்று இலங்கைக்கு எதிராக மோதியது. டாஸ் வென்ற இலங்கை பேட்டிங்கை தேர்வு செய்தது. தொடக்க வீராங்கனை ஹாசினி பெரேரா ரன்ஏதும் எடுக்காமல் டக்அவுட் ஆனார். மற்றொரு வீராங்கனை சமாரி அத்தபத்து ஜெயங்கனி சிறப்பாக விளையாடி 38 பந்தில் 50 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இவர் ஆட்டமிழக்கும்போது இலங்கை 14 ஓவரில் 91 ரன்கள் அடித்திருந்தது. அதன்பின் 36 பந்தில் 31 ரன்களே சேர்க்க 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 122 ரன்கள் அடித்தது.

பின்னர் 123 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா களம் இறங்கியது. முதல் மூன்று வீராங்கனைகள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இதனால் 10 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

பின்னர் 4-வது விக்கெட்டுக்கு கேப்டன் லானிங் உடன் ஜோடி சேர்ந்த ஹெய்னஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஹெய்னஸ் 47 பந்தில் 60 ரன்கள் விளாசினார். லானிங் ஆட்டமிழக்காமல் 41 ரன்கள் அடிக்க ஆஸ்திரேலியா 19.3 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 123 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## மோசமான துடுப்பாட்டத்தால் பின்னடைவு; தோல்வி குறித்து கோலி கருத்து

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் மோசமான பேட்டிங்கால் பின்னடைவு அடைந்ததாக இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி கூறியுள்ளார். தோல்வி குறித்து இந்திய அணி கேப்டன் விராட்கோலி கூறியதாவது:-

இந்த டெஸ்டில் நாங்கள் 'டாசில்' தோற்றோம். 'டாஸ்' மிகவும் முக்கியமானதாகும். ஆனால் அதே நேரத்தில் பெருமை அளிக்க கூடிய வகையில் பேட்டிங் வரிசை இருக்காது. நாங்கள் சவால் கொடுக்கும் வகையில் போதுமான அளவுக்கு ஆடவில்லை.

பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விட்டதாக நாங்கள் நினைக்கவில்லை. 220-230 ரன்களை எடுத்து இருந்தால் கூட நன்றாக இருந்து இருக்கும். மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கலாம்.

எனவே முதல் இன்னிங்சில் மோசமான பேட்டிங் பின்னடைவை ஏற்படுத்தியது.

பந்து வீச்சில் நாங்கள் சவால் விடும் வகையில் திகழ்ந்தோம். நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுகளை இழந்து வரை நாங்கள் நன்றாகவே திகழ்ந்தோம். முன்னிலையை 100 ரன்களாக கொண்டுவர நினைத்தோம். ஆனால் கடைசி 3 வீரர்கள் பேட்டிங் எங்களை வெளியேற்றி விட்டது. பந்து வீச்சாளர்கள் இன்னும் கட்டு கோப்புடன் வீசி இருக்க வேண்டும். பவுலர்களும் தங்கள் பந்து வீச்சில் மகிழ்ச்சி அடைந்து இருக்க மாட்டார்கள்.

பிரித்விஷா போன்றவர்களை குறை சொல்ல வேண்டாம். 2 வெளிநாட்டு டெஸ்டுகளில் தான் ஆடியுள்ளார். ரன்களை எடுப்பது எப்படி என்று அவர் மேம்பட்டு வருகிறார்.

பேட்டிங்கில் அகர்வால், ரகானேவை தவிர மற்றவர்கள் சரியாக ஆடவில்லை. பேட்டிங்கில் மிகப் பெரிய ஸ்கோரை குவித்தால் தான் பந்து வீச்சாளர்கள் சவால் கொடுக்க முடியும். இதுதான் நமது பலம். இந்த டெஸ்டில் இந்த அம்சம் இல்லாமல் போனது.

இந்த டெஸ்டில் நாங்கள் நன்றாக ஆடவில்லை என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். தோல்வியால் உலகமே முடிந்து போய் விடவில்லை. நாங்கள் சொந்த மண்ணில் சிறப்பாக ஆடி வெற்றிகளை பெற்று இருக்கிறோம்.

வெளிநாடுகளில் விளையாடும் போது ஆட்டத்தில் இன்னும் முன்னேற்றம் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

நான் நன்றாக இருக்கிறேன். எனது பேட்டிங் சிறப்பாகவே இருக்கிறது. ரன்களை குவிக்காததால் எனது பேட்டிங் திறன் பாதிக்கப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.



# சின்ன சர்ச்சைக்கு வெகுவிரைவில் தீர்வு

## கயந்த திட்டவட்டம்

(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணிச் சின்னம் தொடர்பான சர்ச்சைக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும். கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சின்னம் சட்ட ரீதியாக தேர்ந் தெடுக்கப்படும் என்று ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**கேள்வி :** அரசாங்கத்துக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்படும் முரண்பாடுகள் காரணமாக உங்களுக்கு வாக்களித்த 56 இலட்சம் மக்களும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் அல்லவா?

**பதில் :** ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக ரீதியானதாகும். யார் வேண்டுமானாலும் விரும்பிய கருத்துக்களை முன்வைக்க முடியும். முன்வைக்கப்படும் சகல கருத்துக்களையும் செவிமடுக்க கட்சி தயாராக இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் இவ்வாறு பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒருமித்த தீர்வை எடுத்தோம்.

வெவ்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுவதையே முரண்பாடுகள் என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்படும்.

நாம் எதிர்க்கட்சியான பின்னர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்று அறிவிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதன்போது அனைவரும் ஒன்றிணைந்து சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்தோம்.

அதேவேளை பொதுத் தேர்தலை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமித்ததோடு, வேட்பாளர்களை தெரிவு செய்யும் அதிகாரத்தையும் அனைவரும் ஒருமித்து வழங்கியிருக்கின்றோம். இந்த கூட்டணியின் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணிக்கான சின்னம் தொடர்பான சர்ச்சைக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும். கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சின்னம் சட்ட ரீதியாக தேர்ந்தெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு

## நீதிமன்றில் ஆஜராக நான்காவது முறையாக வசந்த கரன்னகொடவுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய ப்குதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்களை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்ட, கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை நீதிமன்றில் ஆஜராகுமாறு நான்காவது முறையாகவும் அழைப்பாணை அனுப்பப்பட்டது.



கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்னத்தின் தலைமையின் கீழ் மேல் நீதிமன்ற நீதிபதிகளான அமல் ராஜகருணா, நவரத்ன மாரசிங்க ஆகியோர் உள்ளடங்கிய சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்ற நீதிபதிகளால் இந்த அழைப்பாணை நேற்று அனுப்பப்பட்டது. (இ-7)


உ
சிவமயம்

### வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 27.01.2020 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த அன்புத் தெய்வம்

### அமரர். சுப்பிரமணியம் கணேசமூர்த்தி

(P.W.D ஓவசியர்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 24.02.2020 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதுடன், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 26.02.2020 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடமியன்,
வரணி.

(C-9325)

குடும்பத்தினர்.
077 889 2202



### 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
1944 . 07 . 08



மறைவு
2019 . 03 . 08

### அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினம்

(ஓய்வு நிலை ஆசிரியர்)

பெற்றீர்கள் வளர்த்தீர்கள் சிறப்பாக வாழ வைத்தீர்கள் அப்பா
கண்டிப்பும் அன்பும் கலந்து எம்மை ஆளாக்கினீர்கள் அப்பா
ஒன்றல்ல ஒன்பதாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் என்றென்றும்
நீங்கள் எங்கள் நெஞ்சில் நிறைந்திருப்பீர்கள் அப்பா

(C-9325)

34, மகாத்மா வீதி,
நெல்லியடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (படங்கள்:- செ.ரவிசாந்)

# நல்லூர் பிரதேச கலைஞர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு கலைஞானச்சுடர் விருது மற்றும் இளங்கலைஞர் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேசத்தில் கலை இலக்கியத்துறைக்குப் பங்காற்றி வரும் சிறுகதை, நாவல், நாடகம், நாடக எழுத்துரு, கவிதை, நடனம், குறும்படம், ஓவியம், சிற்பம், இசைநாடகம், இசைக்கலை, வாத்தியக்கலை, வாத்தியக்கருவிகள் உருவாக்கம், கூத்து, கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன்கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்றன) ஒப்பனைக்கலை போன்ற துறை சார்ந்தவர்களிடமிருந்து அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கலைஞானச்சுடர் விருதுக்கான விண்ணப்பமும் 18 வயதிலிருந்து 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இளங்கலைஞர் விருதுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருப்பதுடன் இதுவரை இப்பிரதேச விருதுகளைப் பெறாதவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை நல்லூர் பிரதேச கலாசாரப்பிரிவிலும் www.nallur.ds.gov.lk எனும் இணையத்தளத்தில் download இல் பெற்று உரிய கலைத்துறை சான்றுப்பத்திரப்பிரதிகளுடன் 20.03.2020 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என நல்லூர் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத்தலைவருமான திருமதி எ.அன்ரன்யோகநாயகம் அறிவித்துள்ளார். (இ

# அலங்காரத் திருவிழா ஆரம்பம்

(குப்பிழான்)

தென்மராட்சி வரணி மாசேரி புராதன குருநாதர் கோயில் அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலயத் திருவிழாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் மாசிமக நன்னாளன்று முறபகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-5-18)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## பஞ்ச பட்சி குறியீடுகளை பயன்படுத்தும் விதம்

ஏவல், பில்லி, சூன்யம், வைப்பு, செய்வினை, கண் திருஷ்டி இதுபோன்ற உபாதைகள் உள்ளவர்கள் தங்கள் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய பட்சியின் (பஞ்சபட்சி) படத்தை தங்கள் வீடுகளில் மாட்டி வைக்க வேண்டும். பட்சியின் படங்களை பார்க்கும் போது அந்தந்த பட்சிக்குரிய பஞ்சாட்சர மந்திரத்தையும் உச்சரிக்க வேண்டும்.

பஞ்ச பூதங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பஞ்சாட்ஷரம் என்னும் சிவ மந்திரத்திற்கு உண்டு. "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்தே பஞ்சாட்ஷரம் எனப்படுகிறது. பஞ்சாட்ஷரத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒரு பட்சியைக் குறிக்கிறது. அந்த விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

ந-வல்லூறு, ம-ஆந்தை, சி-காகம், வ-கோழி, ய-மயில்

பஞ்ச பட்சிகளுக்குரிய மந்திரம் கீழே தரப்பட்டுள்ளது.

வல்லூறு-ஓம் நமசிவாய சுவாஹா, ஆந்தை-ஓம் மசிவயந சுவாஹா, காகம் -ஓம் சிவயநம சுவாஹா, கோழி -ஓம் வயநமசி சுவாஹா, மயில் - ஓம் யநமசிவ சுவாஹா

ஒருவருடைய ஜென்ம நட்சத்திரம் எதுவோ அதைக் கொண்டு அவருடைய நட்சத்திரபட்சியை அறிய வேண்டும். நட்சத்திர பட்சியை நிர்ணயம் செய்வதில் பல அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன. ஆயினும் பெரும்பாலானவர்கள் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு பட்சங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தின் பட்சி ஒன்று தான் எனக் கூறியுள்ளனர். நாமும் அவ்வாறே கொள்வோம். நட்சத்திரங்களுக்குரிய பட்சிகளின் விபரம் அட்டவணையாகக் கீழே தரப்பட்டுள்ளது.

### பஞ்ச பட்சி குறியீடுகள்

| நட்சத்திரம் | பஞ்ச பூதம் | பட்சி |
|---|---|---|
| அஸ்வினி<br>பரணி<br>கிருத்திகை<br>ரோஹிணி<br>மிருகசீரிடம் | நிலம் | <br>வல்லூறு |
| திருவாதிரை<br>புனர்பூசம்<br>பூசம்<br>ஆயில்யம்<br>மகம்<br>பூரம் | நீர் | <br>ஆந்தை |
| உத்திரம்<br>அத்தம்<br>சித்திரை<br>ஸ்வாதி<br>விசாகம் | நெருப்பு | <br>காகம் |
| அனுசம்<br>கேட்டை<br>மூலம்<br>பூராடம்<br>உத்திராடம் | காற்று | <br>கோழி |
| திருவோணம்<br>அவிட்டம்<br>சதயம்<br>பூரட்டாதி<br>உத்திரட்டாதி<br>ரேவதி | ஆகாயம் | <br>மயில் |

## இராசி பலன்

**மீனம்** 
புதியவர்களின் நட்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**மேடம்** 
ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** 
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடும், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** 
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** 
ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் கூடும் நாள், நண்பர்களால் வளர்ச்சிகூடும்.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| சூரி, சந் | இராசி பலன்<br>கிரகநிலை | | |
| புத | | | |
| சனி, கேது, குரு, செவ் | | | |

சந்திராஷ்டமம்
ஆயில்யம், மகம்

**25.02.2020**
மாசி 13, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
துதியை பின்னிரவு 1.12 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 6.53 மணிவரை
சுபநேரம் 10.59-12.29 மணிவரை
இராகுகாலம் 3.29-4.59 மணிவரை
விவேகத்திலும் வீரம்
அருஞ்செயல் புரியும்

வளவன்

**கடகம்** 
சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** 
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகேட்டு வரலாம்.

**சிம்மம்** 
நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், வழிபாட்டில் வளர்ச்சி கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**தனுசு** 
நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**விருச்சிகம்** 
தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**துலாம்** 
நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகும்.

**கன்னி** 
குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், திருமண முயற்சிகள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

# கரவெட்டியில் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு அபிவிருத்தி செயலணியின் மூலம் குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட மேற்படி வேலைத்திட்டத்திற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 26,27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந் நேர்முகத் தேர்விற்கு பங்கு பற்ற வேண்டிய திகதி, நேரம் மற்றும் நேர்முகத் தேர்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பான கடிதங்கள் உரிய கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் உரிய கிராம உத்தியோகத்தர்களுடன் விண்ணப்பதாரிகள் உடனடியாகத் தொடர்பு கொண்டு நேர்முகத் தேர்வுக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக தொலைபேசி இலக்கம் 021 226 3258 இற்கு தொடர்பு கொள்ளவும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# மரக்கறி மூடைகளுக்குள் கஞ்சா; சந்தேகத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளைக்கு மரக்கறி மூடைகளுக்குள் 6 கிலோ கஞ்சா போதைப் பொருளை கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கஞ்சா போதைப் பொருள் கடத்தப்படுவதாக சங்கானை மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு கடந்த சனிக்கிழமை இரவு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அவர்கள் மேற்கொண்ட விசாரணையில் மரக்கறிகளுக்குள் மறைத்து வைத்து கடத்த தயாராக இருந்த நிலையில் 6 கிலோ கஞ்சாவினை மீட்டுள்ளதுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.


கைது செய்யப்பட்டவர் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 33 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாப் போதைப் பொருள் ஆகியன நீதிமன்றில் முன்வைக்க நடவடிக்கையை சங்கானை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (ஜ)




யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதிஒதுக்கீட்டிலிருந்து துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நவிண்டில் பெருஞ்சீமா ஞானவைரவர் ஆலய முன் வளைவு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்:-மகாலிங்கம்)

# புதைந்த நிலையில் துப்பாக்கி மீட்பு

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வாகனேரி காட்டுப் பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி ஒன்றை பிரதேச இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளாகத் தெரிவித்தனர்.

இதன்போது ரி-56 துப்பாக்கியும் அதற்கு பயன்படுத்தப்படும் 23 ரவைகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் அது சேதமடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் வாழைச்சேனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை மறுதினம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.டெனேசன் புஸ்பகரன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி- நிர்வாகம்) சி. மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக மாவிட்டபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் செ. நிஷாந்தன், யாழ்ப்பாணம் கிருபா சாரதிப் பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் சு.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)


## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய் தாதியர் பயிற்சியாளர்

எமது வைத்தியசாலைக்கு தாதியர் பயிற்சியாளர்க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் தகுதி சான்றிதழ்களுடன் எதிர்வரும் 08.03.2020 அன்று 9.00 மணிக்கு வைத்தியசாலைக்கு சமூகம் தரவும்.

தலைவர்
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து)
மூளாய்

தொலைபேசி இல:
021 225 0441 (9.00 a.m - 4.30 p.m)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 12 ¾ செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்<br>தொ.இ:B/10545 | பிறப்பு: 1985 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:வெளிவாரிபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: படித்த அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10576 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா:46 செவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தக்கைமைதொழில்:Doctor<br>எதிர்பார்ப்பு: தகைமைக்கேற்ப<br>தொ.இ: B/10542 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 23 1/2 செவ் 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமைதொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா விரும்பத்தக்கது)<br>தொ.இ: G/10581 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 73 செவ் 8இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: A/L, வியாபாரம்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10543 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 39 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி, ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: படித்த நிரந்தரதொழில் பார்க்கும் யாழ்ப்பாண மணமக்ன்<br>தொ.இ: G/10593 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 37 3/4 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, கிறீஸ் நாட்டில் கப்பலில் வேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்<br>தொ.இ: B/10544 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.sc.நிர்வாகசேவை<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்<br>தொ.இ: G/10595 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

ரெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# பகிடிவதையால் பல்கலைக்கழகத்தை கைவிட்டவர்கள் விண்ணப்பிக்கவும்

## அமைச்சர் பந்துல அறிவிப்பு



(கொழும்பு)

பல்கலைக்கழக கற்கை நெறிகளைப் பகிடிவதையின் காரணமாக இடையில் கைவிட்டுச் சென்ற மாணவர்களுக்கு மீளவும் பல்கலைக்கழக கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து உரிய சிபார்சுகளை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தவகையில், இக்குழுவிற்கு பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக உயர்கல்வியை கைவிட்டுச் சென்ற மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமையவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலக சாரணர் தினக் கொண்டாட்டம்





(கொடிகாமம்)

கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் உலக சாரணர் தினக் கொண்டாட்டமும் பேடன் பவல் தின விழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபரும் கிளிநொச்சி சாரணிய மாவட்ட ஆணையாளருமான மு.பிறேம்குமார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட சாரணிய சங்கத் தலைவரும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபருமான கி.விக்னராஜா, கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய (உடற்கல்வித் துறை) ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தா, தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் த.கோகுலன், கொடிகாமம் திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர், தலைமைக் காரியாலய ஆணையாளர்கள், உயரதிகாரிகள், சாரண அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-114)

# தேசிய போக்குவரத்து ஆணையகத்தில் பதிவு செய்யப்படாத பஸ்கள் பறிமுதல்

(கொழும்பு)

17 அரை சொகுசு பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த தேசிய போக்குவரத்து ஆணையகம், குறித்த ஆணையகத்தில் பதிவு செய்யாமல் இருக்கும் அனைத்து பஸ்களையும் பறிமுதல் செய்ய நடவடிக்கையும் எடுத்துள்ளது.

இரவு சுற்றுப் பயணங்களின் போது பயணிகளிடமிருந்து அதிகப்படியான கட்டணங்களை குறித்த பஸ் நடத்துநர்கள் வசூலித்த குற்றச்சாட்டுக்கு அமையவே இவ்வாறு 17 பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இல.17, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் "கலை ஞான சுரபி" தியான இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு. ம.டேவிற் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் புவவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்தது.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு "காவிய நாயகன்" என்னும் பெயரில் மாலை 6.45 மணியளவில் திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. "காவிய நாயகன்" ஆற்றுகை முதன்முதலாக 2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து 2004, 2008 ஆம் ஆண்டுகளிலும் இறுதியாக 2013 ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த விசேட திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் விசேட செயற்றிட்டம் இம்மாத இறுதியில் அமுல்படுத்தப்படவுள்ளதால் நாய்களை வளர்ப்போர் நாய்களை தங்கள் வளவினுள் வைத்திருக்குமாறும் பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்கள் "நாய்கள் காப்பகத்திற்கு" அனுப்பப்படும் என்றும் மேலும் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வீட்டு நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பு ஊசி ஏற்றும் செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனால் வீட்டு நாய்களுக்கு குறித்த தடுப்பூசி ஏற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (இ)

# நல்லாட்சி அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான சதியா? உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## முஜிபுர் சந்தேகம்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை தோல்வியடையச் செய்வதற்காகவா? உயிர்த்த ஞாயிறுதினத் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்திலே நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் பிரதானமானது உயிர்த்த ஞாயிறுதினத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலாகும்.

எதிர்த்தரப்பினர் ஐக்கிய தேசிய முன்னணி மீதும் அதன் உறுப்பினர்கள் மீதும் பாரிய குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் எடுத்துக் காட்டினர். இது எமது கட்சிக்கு மாத்திரமன்றி, எமது ஜனாதிபதி வேட்பாளருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் தற்போது வெளிவரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் நல்லாட்சி அரசாங்கத்தை இலக்கு வைத்துத்தானா இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, நாட்டில் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக புலனாய்வு அதிகாரியொருவர் தெரிவித்ததாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவித்ததாக வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு தாக்குதல் தொடர்பில் முன்னரே தகவல் கிடைக்கப் பெற்றபோதிலும் அது தொடர்பில் கவனம் செலுத்தாது இருந்தமைக்குக் காரணம் என்ன? ஜனாதிபதியே முப்படைகளின் தளபதியாகச் செயற்பட்டார்.

பாதுகாப்புச் அமைச்சும் அவரிடமே இருந்தது. இதேவேளை பாதுகாப்பு சபையின் கூட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எவருக்கும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொடுத்திருக்கவில்லை.

அடிப்படைவாதிகள் எனக்கூறப்படும் சஹ்ரான் தலைமையிலான குழுவினர் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலே வளர்ந்து வந்துள்ளனர் என்பதும் தற்போது உறுதியாகியுள்ளது. இதனை அரசதரப்பு அமைச்சர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா சஹ்ரான் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, சஹ்ரானைக் கைது செய்ய முற்படும் போது அவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகக் கூறி அவரைக் கைது செய்தனர்.

இந்த சில்வா தொடர்பில் முறைப்பாடளித்த நாமல் குமார என்ற நபர் ஜனாதிபதி செயலகத்திலே ஊதியம் பெற்று வந்துள்ளார். இவருக்கும் ஜனாதிபதி செயலகத்திற்குமான தொடர்பு என்ன? ஏன் அவருக்கு இவ்வாறு ஊதியம் வழங்கப்பட்டது என்பது தொடர்பில் எமக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

அதுமாத்திரமன்றி தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ளும் அளவிற்கு இந்த நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினைகள் இல்லை. இதனால் இந்த விடயங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் சஹ்ரானை நல்லாட்சியை தோல்வியடைய செய்வதற்காக பயன்படுத்தியுள்ளார்களா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான 5 மாத இடைவெளியிலேயே இந்தத் தாக்குதல்களும் இடம்பெற்றன. எனவே இது ஒரு சூழ்ச்சிகர செயலாக இருக்கலாம் என்றே நாங்கள் கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கோப்பாயில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட விதை நடுகைப்பொருள் விற்பனை நிலையத்தின் நடமாடும் சேவை பிரதி செவ்வாய்க்கிழமைகளில் யாழ். கோப்பாயில் இடம்பெறவுள்ளதாக பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களின் கீழ் தற்போது சிறுபோக பயிர்ச் செய்கைகளுக்கான முன்னாயத்தங்களில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதை நெல்லை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் போதிய விதை நெல் வர்க்கங்கள் கையிருப்பில் உள்ளன என்றும் அதனை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விவசாயிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு வாராந்தம் செவ்வாய்க்கிழமைகளில் யாழ்ப்பாணம் கோப்பாயில் அமைந்துள்ள விதைகள் அமுல்படுத்தும் நிலையத்தில் நடமாடும் சேவை மேற்கொள்ளப்படுவதாகவும் இதன்மூலம் விவசாயிகள் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-315)

# காட்டுப் பகுதிக்கு விசமிகளால் தீ வைப்பு



(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுன்லோ தோட்ட 56 ஆவது பிரிவில் உள்ள 20 குடியிருப்புப் பகுதியில் இருந்த பற்றைக் காட்டுக்கு விசமிகளால் தீ மூட்டப்பட்டதில் சுமார் 5 ஏக்கர் பற்றைக் காடு தீக்கிரையாகியுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவ்வாறு காடுகளுக்கு தீ வைப்பதால் வன ஜீவராசிகள் உயிரிழப்பதுடன் நீர் ஊற்றுகள் வற்றிப்போக வாய்ப்புள்ளது என்பதுடன் தற்போது நிலவும் வரட்சியான காலநிலையில் நீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான செயலை செய்வோரை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆகையால் காடுகளுக்கு தீ வைக்கும் நபர்களை உடன் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு மஸ்கெலியா பொலிஸார் கோரிக்கை விடுத்தனர். (ஜ)

# சாதி, மத பிரிவினைக்கு இடமளிக்கக்கூடாது

## வலம்புரி மீதான அச்சுறுத்தலுக்கு சுரேன் குருசாமி கடும் கண்டனம்


(யாழ்ப்பாணம்)

மதங்களின் பெயரில் இடம்பெறும் வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த றெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளர் சுரேன் குருசாமி மதவாதத்தைத் தூண்டுபவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அண்மைய நாட்களாக வடக்கு-கிழக்கில் மதவாத ரீதியான கருத்து மோதல்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில், பல்லின மக்களும் பல சமயத்தவர்களும் வாழும் இந்த நாட்டில் தனித்துவமும் சகிப்புத்தன்மையுடனும் வாழும்போது தான் ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கமுடியும். அதை விடுத்து மதத்தின் பெயரிலோ, இனத்தின் பெயரிலோ மேலாதிக்கத்தையோ, வன்முறைகளையோ பிரயோகிக்கும் மனப்பாங்கை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. குறிப்பாக நாம் வாழும் நாட்டிலேயே இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படும் தமிழர்களாகிய நாம் எமக்குள் மதங்களின் பெயரால் மோதிக் கொள்வது எம்மை மேலும் பலவீனப்படுத்திவிடும். பல்வேறு மதங்களைப் பின்பற்றும் நாம் எமது சமயத்தை சரியாகப் பின்பற்றி மதத்தின் சித்தாந்தங்களைச் சரியாகக் கற்றுக்கொண்டால் பிறிதொரு மதத்தை ஆக்கிரமிக்கவோ, வன்முறைகளைப் பிரயோகிக்கவோ முற்பட மாட்டோம்.

நாடு தீர்க்கமான பொதுத் தேர்தல் ஒன்றை சந்திக்கவுள்ள நிலையில் சில அரசியல்வாதிகள் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிடும் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் நிலையில் அவர்களின் எதிர்பார்ப்புக்கோ அல்லது சுயநல அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குள்ளோ நாம் சிக்கிவிடாமல் தமிழினம் எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான தீர்க்கமான முடிவுகளை எடுக்கக்கூடியவர்களாகவும் சாதி, மதங்களை கடந்து இனத்தின் விடுதலைபற்றி சிந்திக்கக்கூடியவர்களாகவும் மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



றெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளர் சுரேன் குருசாமி வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வந்து நிலைமைகளைக் கேட்டறிந்ததோடு வலம்புரி" மீதான அச்சுறுத்தலுக்கு தனது கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-299)

# யாழில் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பம்



(குப்பிழான்)

யாழ்.குடாநாட்டில் உருளைக்கிழங்கு அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

செம்மண் வளமுள்ள வலிகாமம் பகுதியில் பல ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகளால் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வலிகாமம் பிரதேசத்தில் குப்பிழான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, வயாவிளான், சுன்னாகம், இணுவில், அச்செழு, ஊரெழு, உரும்பிராய், கோண்டாவில், கோப்பாய், இடைக்காடு, கதிரிப்பாய், அச்சுவேலி, பத்தமேனி, நவக்கிரி, சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலி, மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் பல ஏக்கர் நிலப் பரப்பில் உருளைக்கிழங்குச் செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக உருளைக்கிழங்கு அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

சில நாட்களுக்கு முன்னர் தென்னிலங்கையின் முக்கிய பொருளாதார சந்தையான தம்புள்ள சந்தையில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 110 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை விற்பனையாகிய போதும் தற்போது 85 ரூபாய் முதல் 90 ரூபாய் வரையே விற்பனையாகிறது.

இதேவேளை, இம்முறை விளைச்சல் அதிகமாகக் காணப்படுகின்ற போதும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் இறக்குமதி வரியைத் தற்போதைய அரசாங்கம் இதுவரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக உருளைக்கிழங்குச் செய்கையாளர்களான விவசாயிகள் கவலை வெளியிட்டனர். (இ-18)

## வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை; ஆட்சி மாற்றம் நிச்சயம்

# அரசியல் தேவைகளுக்காக பட்டதாரிகளைப் பயன்படுத்துவதை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும் - ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் 100 நாட்களுக்குள் பொய்யாக்கப்பட்டுள்ளன. அரசியல் தேவைகளுக்காக வேலையற்ற பட்டதாரிகளைப் பயன்படுத்திக் கொள்வதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் நிச்சயம் மக்கள் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மக்களுக்கு அபிவிருத்தி தொடர்பான பல வாக்குறுதிகளை வழங்கினர். கடந்த அரசாங்கத்தை விமர்சித்து ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பயனை நாட்டு மக்கள் இன்று பெற்றுக்கொள்ளவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி ஏற்று 100 நாட்கள் கடந்துள்ள நிலையில் நடுத்தர மக்களுக்கு எவ்வித அபிவிருத்திகளும் நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. மாறாக பல நெருக்கடிக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி 2015 ஆம் ஆண்டு ஆட்சியமைத்து 100 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இல்லாமல் பல அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாக முன்னெடுத்தது. அத்தியாவசிய பொருட்களின் விலைகுறைப்பு, அரச ஊழியர்களின் மாதக் கொடுப்பனவு துறைக்கேற்ப அதிகரிப்பு, உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த அரசாங்கத்தை விமர்சித்தே பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. இன்று பல மோசடிகளுடன் கைது செய்யப்படுபவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள். நீதிமன்றம் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளையும் ஒரு இலட்சம் இளைஞர்களையும் அரசாங்கம் பொதுத் தேர்தலுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளவுள்ளது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் 12 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்புக்களை இழந்து வீதிக்கு இறங்கிப் போராடும் நிலை ஏற்பட்டது.

கடந்த அரசாங்கத்தைக் காட்டிலும் புதிய அரசாங்கத்தில் நன்மைபெற முடியும் என்பதைக் கருதியே ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் தெரிவு செய்தனர். ஆனால் இன்று எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. மக்களின் எதிர்பார்ப்புக்கள் திசைமாறி செல்கின்றன. எனவே பொதுத்தேர்தலில் சிறந்த தீர்மானத்தை எடுத்து நிச்சயம் ஆட்சி மாற்றத்தை மக்கள் ஏற்படுத்துவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகள் இந்த வருடத்துக்குள் முடிவுறுத்த வேண்டும்

## முல்லை. நீதிமன்று தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகள் இந்த வருடத்துக்குள் முடிவுறுத்த வேண்டும் என முல்லை நீதிமன்று அறிவித்துள்ளதோடு இந்த வழக்குகள் யாவும் இந்த வருடத்துக்குள் முடிவடைவதற்காக ஒவ்வொரு வழக்குக்கும் வெவ்வேறான. திகதிகள் இடப்பட்டு ஒவ்வொரு வழக்கும் முடிவடைய செய்ய வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது என மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ் ரத்னவேல் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட 7 பேருடைய ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தளபதிகளில் ஒருவரான எழிலன் உள்ளிட்ட 12 பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் கடந்த சில வருடங்களாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றுவந்த நிலையில் எழிலன் உள்ளிட்ட ஐந்துபேர் தொடர்பான ஆட்கொணர்வு வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம் பெற்றுவரும் நிலையில் மிகுதியாக உள்ளவர்களின் 7 வழக்குகள் முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந்தவழக்கில் மனுதாரர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ் ரத்னவேல் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

எதிர்மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான இராணுவத் தரப்பை சேர்ந்த சட்டத்தரணிகள் மன்றுக்கு வருகைதந்த நேரத்தில் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதோடு நீதிமன்றை சூழவும் வழமைக்கு மாறாக ஆயுதம் தாங்கிய பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இறுதியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி கே .எஸ் ரத்னவேல், காணாமல் போனோருடைய ஆட்கொணர்வு மனுக்கள் சில அதாவது 7 மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதில் முதலாவது வழக்கில் சாட்சிதாரின் சாட்சியங்கள் எடுபட்டு பின்னர் அந்த வழக்கு பிறிதொரு திகதிக்கு தவணையிடப்பட்டது.

மேலும் ஒரு வழக்கு அதில் மனுதாரர் சாட்சியமளித்து அதன் இன்னொரு பகுதியை ஏப்ரல் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என மேலும் தெரிவித்தார். (9-281)

## ஆசிரியர்களை நியமிக்கக்கோரி போராட்டம்





(நெளுக்குளம்)

வவுனியா, வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி பெற்றோர்களும் மாணவர்களும் இணைந்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கணக்கீடு, வர்த்தகம், இந்து நாகரிகம், கணிதம், தமிழ் மற்றும் கலைத்துறை பாடங்களான சித்திரம், சங்கீதம் இரண்டாம் மொழி பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதேவேளை 342 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் 20 ஆசிரியர்களும் பகுதி நேரமாக இரண்டு ஆசிரியர்களுமே கடமையில் உள்ளனர் என பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற செட்டிகுளம் பிரதேச செயலாளர் சி.சிவகரன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களால் கூறப்பட்ட விடயம் தொடர்பாக கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஒரு வாரத்தில் தீர்வைப் பெற்றுத்தருவதாக தெரிவித்ததாக தெரிவித்தார்.

இதேவேளை செட்டிகுளம் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம். பரீட் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடியதுடன் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை 14 நாட்களுக்குள் கடமையில் அமர்த்துவதாகவும் அவர்கள் கடமைக்கு சமுகம் தராத சந்தர்ப்பத்தில் உடனடியாக வேறு ஆசிரியர்களை நியமிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

ஒரு வார காலத்தில் நடவடிக்கை எடுக்காத பட்சத் தில் தாம் தமது போராட்டத்தை தொடர்ந்தம் நடத்துவோம் என போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் தெரிவித்தனர். (9-299)

## திறன் விருத்தி வகுப்பறை, விளையாட்டு முற்றம் திறப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கான திறன் விருத்தி வகுப்பறை மற்றும் விளையாட்டு முற்றம் என்பன மாணவர் பாவனைக்கு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் 10 இலட்சம் பெறுமதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு முற்றம் மற்றும் ஐந்து இலட்சம் பெறுமதியில் அமைக்கப்பட்ட திறன் விருத்தி வகுப்பறை ஆகியன பாடசாலை மாணவர் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-100)

## முல்லை.கடற்றொழிலாளர் சம்மேளன நிர்வாகத் தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளத்தினுடைய புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் மார்ச் மாதம் இடம் பெறவுள்ளது.

எனினும் குறித்த நிர்வாகமானது கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக புதுப்பிக்கப்படாமல் இருந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதியன்று புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன. (9)




## மாற்றுத்திறனாளிகள் சங்க கட்டடம் திறப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளின் சங்கத்திற்கான கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாண்டியன்குளம் பிரதேச மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் தலைவர் தம்பிமுத்து சிவனடியான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் ச.கனகரத்தினம், மாந்தை கிழக்கு பிரதேச செயலா ளர் இ.ரஞ்சனா இணைந்து கட்டடத்தை திறந்து வைத்தனர். (9-281)

## புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் சட்டவிரோத வெடிபொருள் பாவனையை தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேராவில் பகுதியில் வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக சட்ட விரோத ஆயுதங்களை (கட்டுத்துவக்கு) மற்றும் வெடிபொருட்கள் பயன்படுத்தும் சம்பவங்களால் ஏற்படுகின்ற ஆபத்துக்கள் தொடர்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டமொன்று பொலிஸாரின் தலையீட்டினால் கைவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் பகுதியில் சகோதரர்கள் இருவர் கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் படுகாயமடைந்திருந்தனர்.

தேராவில் கிராமத்தில் சட்ட விரோத கட்டுத்துப்பாக்கி பயன்பாட்டாளர்களால் கால்நடை வளர்ப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் எனவும் இவ்வாறான நடவடிக்கையினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த பகுதியில் கால்நடைகளை மேய்த்துவரும் மக்களின் கால்நடைகள் தொடர்ச்சியாக இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களினால் இறைச்சிக்காக திருடப்படுவது உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்ந்து வருவதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இருந்த போதிலும் குறித்த பகுதியில் சம்பவங்கள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் கட்டுத்துவக்கு மற்றும்வெங்காய வெடி போன்றவற்றினால் இவ்வாறான உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். எனவே இவ்வாறான நிலை மைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மக்கள் முன்னெடுக்க ஏற்பாடு செய்த வேளை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களிடம் நேரடியாகச் சென்று இந்த விடயங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற கொள்வதாக உறுதியளித்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டுள்ள தாகவும் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம பெறுமாயின் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மக்கள் தெரிவித்தனர். (9-281)

# தேர்தல் அறிக்கையிடல் தொடர்பான செயலமர்வு





(குருமன்காடு)

வடக்கு-கிழக்கு பகுதியினை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு தேர்தல் அறிக்கையிடல் தொடர்பான செயமலர்வு வவுனியாமில் வீதி யில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் கடந்த இரு நாட்கள் நடைபெற்றது.

பாராளுமன்றத் தேர்தல் நெருங்கி வருகின்ற நிலையில் அதனை எவ்வாறு அறிக்கை யிடுவது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் இன்டர் நியூஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இச் செயலமர்வு இடம் பெற்றது.

ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகம் எல்.எம்.மொஹமட் வளவாளராக கலந்து கொண்டு தேர்தல் தொடர்பான சட்டங்கள், குற்றச்செயல்களின் தண்டனைகள், வழிகாட்டு நெறிகள், பாராளுமன்றம் கலைப்பதில் உள்ள சிக்கல்கள், ஆரம்பகால நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

இதில் திருகோணமலை, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உட்பட வடக்கு, கிழக்கினைச் சேர்ந்த இருபதுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். (9-250)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் 1101 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரிய போராட்டம் ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இக் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் தேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டதையடுத்து ஊர்வலமாக மணிக்கூட்டு கோபுரத்தை சென்றடைந்து அங்கிருந்து அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் பந்தலுக்கு முன்பாக கோசங்களை எழுப்பியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (9-299)




# நிர்வாக சபை கூட்டம்


(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் கரைச்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் சி.சுரேஸ் தலைமையில் சிவநகர் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

புதிய தலைவராக இ.திலக்சன், உப தலைவராக த.ரமனேஸ், செயலாளராக வை.பர மேஸ்வரன், உபசெயலாளராக தி.தயானந்தன், பொருளாளராக இ.சந்திரகுமார் ஆகியோர்தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்கள் 8 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (9-254)

# கிளிநொச்சி பிரதான வீதிகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி நகரத்தில் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக விடப்படும் கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுவதுடன் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன எனவும் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தின் ஏ-9 வீதி முறிகண்டி முதல் பரந்தன் வரையான பகுதிகளிலும் ஏ-35 வீதியின் பரந்தன் சந்திமுதல் விசுவமடு வரையான பகுதிகளிலும் பூநகரி வீதி, கனகபுரம் வீதி ஆகிய பகுதிகளில் பெருமளவான கால்நடைகள் இரவுவேளைகளில் கட்டாக்காலிகளாக விடப்படுகின்றன.

இவ் வாறு இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக வீதிகளில் திரியும் கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான விபத்துக்களால் பலர் காயங்களுக்கு உள்ளாகி வருவதுடன் பெருமளவான சொத்துக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.இதேவேளை இவ்வாறு விடப்படும் கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களில் அண்மையில் கூட ஒரு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இதனைவிட கால்நடைகளும் விபத்துக்களில் சிக்கி உயிரிழக்கின்றன.

எனவே இவ்வாறு வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை இரவு வேளைகளில் கட்டிப் பராமரிக்க வேண்டும் எனவும் திணைக்கள அதிகாரிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




# கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் அதிகரித்த ஆதன வரியை குறைப்பது தொடர்பில் ஆளுநர்,தவிசாளருக்கு கடிதம்

(அக்கராயன்)

இலங்கையில் வறுமை அதிகமுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் வாழும் மக்களிடமிருந்து அதிகரித்த வீதத்தில் ஆதன வரி அறவிடப்படுவதாக தொடர்ச்சியாக மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே ஆதன வரியை குறைப்பது பற்றி சபையின் அபிப்பிராயத்தை பெற்று அனுப்புமாறு வடக்கு மாகாண ஆளுநர் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், செயலாளருக்கு முகவரியிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தை ஆளுநர் சார்பில் அவரின் உதவிச் செயலாளர் கே.எஸ். செல்வநாயகம் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் தங்கள் சபையால் (கரைச்சி பிரதேச சபை) அதிகளவான ஆதனவரி அறவிடப்படுவதாகவும் இது வாழ்வாதாரத்தில் பின் தங்கியுள்ள தமக்கு மேலும் சுமையை அளிப்பதாகவும் குறிப்பிட்டு ஆதனவரியை குறைப்பதற்கு ஆவன செய்யுமாறு பொது மக்கள் கோரியுள்ளனர்.

இலங்கையின் வறுமை அதிகமுள்ள மாவட்டங்களில் தங்கள் மாவட்டமும் ஒன்றாகும். எனவே பொதுமக்களின் இக்கோரிக்கை தொடர்பில் தங்கள் சபையின் அபிப்பிராயத்தைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் பணித்துள்ளார்.

எனவே இவ்விடயத்தை சபையில் முன்வைத்து அபிப்பிராயத்தை ஆளுநருக்கு சமர்ப்பிக்க ஏதுவாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையால் தற்கால சந்தை பெறுமதியில் சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டதன் காரணமாக பொது மக்களின் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக அதன் வருடப் பெறுமானமும் அதிகரித்தே காணப்பட்டது. இதனால் அப்பெறுமதிக்கு பத்து வீத அதிகரிப்பானது பொது மக்களுக்கு பெரும் சுமையாக இருந்து வந்துள்ளதனை தொடர்ந்து மக்கள் மத்தியில் எதிர்ப்புக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-350)

# மன்.எருக்கலம்பிட்டி சந்தியில் 2 கடைகள் தீயில் எரிந்து நாசம்

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி எருக்கலம்பிட்டி சந்தி 5 ஆம் கட்டை பகுதியில் உள்ள 5 கடைகளைக் கொண்ட கடைத் தொகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்து காரணமாக குறித்த கடைத்தொகுதியிலுள்ள இரு கடைகள் முற்றாக எரிந்துள்ளன.

குறித்த கடைத்தொகுதி நேற்று அதிகாலை ஒரு மணிக்குப் பின் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

குறித்த சம்பவத்தைக் கண்ட அப்பகுதி மக்கள் உடனடியாக கடை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தியதோடு, பேசாலை பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பொதுமக்களின் உதவியுடன் தீ அணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.





இதில் இரு கடைகள் முற்றாக தீயில் எரிந்துள்ளதுடன் ஏனைய மூன்று கடைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (9-285)

## பாரதம்

# குடியுரிமைத் திருத்தச்சட்டத்திற்கு எதிர்ப்பு விவகாரம் இரு பிரிவினருக்கு இடையே கல் வீசி மோதல்

## பொலிஸார் கண்ணீர்ப்புகை வீச்சு



(டில்லி)

டில்லியில் திருத்தப்பட்ட குடியுரிமை சட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்தியபோது இரு தரப்பினருக்கு இடையே மோதல் ஏற்பட்டதால் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு வீசினர்.

திருத்தப்பட்ட குடியுரிமை சட்டத்திற்கு எதிராக இந்தியாவில் பல பகுதிகளில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடகிழக்கு டில்லியில் உள்ள ஜாஃப்ராபாத்தில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது இரு பிரிவினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. மோதல் அதிகரிக்க இருதரப்பினரும் கல் வீச்சில் ஈடுபட்டனர். இதனால் அந்த இடம் போர்க்களம் போன்று காட்சியளித்தது.

இதனால் இருதரப்பினருக்கும் இடையிலான மோதலை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். இதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

பாதுகாப்பு முன்னேற்பாடாக சீலாம்பூர் - மஜ்பூர் இடையில் இருக்கும் ஜாஃப்ராபாத் மெட்ரோ நிலையத்தின் வாசல்கள் மூடப்பட்டது. (ஐ)

# உலை...

# உயிரிழ...

(பீஜிங்)

## சீனாவில் கொரே... பாதிப்பால் மேலும் ...ரிழந்த நிலையில், ப... 2,592 ஆக உயர்ந்து...

சீனாவில் ஹுபெய் மாகாணம் வுஹான் நகரில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் நாடு முழுவதிலும் பரவி பெருமளவிலான உயிரிழப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா வைரஸ் பரவுவது தற்போது குறையத் தொடங்கியுள்ளது.

எனினும், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பவர்களின்

# பிறந்தவுடன் வைத்தியரை முறைத்துப்பார்த்த குழந்தை



(ரியோடி ஜெனிரோ)

குழந்தைகள் பிறந்தவுடன் அழுவதற்கு பதிலாக தன்னுடைய புருவங்களை சுருக்கி கண்களால் கோபத்தை வெளிக்காட்டுவது போல் வைத்தியரை முறைத்து பார்த்த புகைப்படம் இணையத்தில் வைரலாகியது.

உலகில் மிக பெரும்பாலான குழந்தைகள் பிறந்தவுடன் அழவே செய்கின்றன. மிகவும் அரிதாக புன்னகைபூக்கும் குழந்தைகளும் உண்டு. அதேசமயம் சில குழந்தைகள் பிறந்தவுடன் எந்தவித அசைவும் இன்றி இருக்கும். அந்தச் சமயத்தில் வைத்தியர்கள் எதையாவது செய்து குழந்தையை அழ வைப்பார்கள்.

இந்த நிலையில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள ஒரு வைத்தியசாலையில் டயானே டிஜீசஸ் பார்போசா என்ற பெண்ணுக்கு அண்மையில் பெண் குழந்தை பிறந்தது. பிறந்தவுடன் அந்தக் குழந்தை அழாமல் இருந்தது.

எனவே குழந்தையின் ஆரோக்கியத்தை சோதிப்பதற்காக வைத்தியர்கள் குழந்தையை அழ வைக்க முயற்சித்தனர். ஆனால் அந்த குழந்தை அழுவதற்கு பதிலாக தன்னுடைய புருவங்களை சுருக்கி கண்களால் கோபத்தை வெளிக்காட்டுவது போல் வைத்தியரை முறைத்துப் பார்த்தது. பின்னர் வைத்தியர் குழந்தையின் தொப்புள் கொடியை துண்டித்தவுடன் குழந்தை அழுது இயல்பு நிலைக்கு திரும்பியது. (ஐ)

# கொரோனா வைரஸ் ... இத்தாலியில் இருவர் உ...

(ரோம்)

ஐரோப்பாவில் கொரோனா வைரஸால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடான இத்தாலியில் இதுவரை 2 பேர் உயிரிழந்தனர் என உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

மேலும் வடக்கு பகுதியிலேயே அதிகளவிலானவர்கள் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டனர் என்றும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 79 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டிசெம்பர் மாத இறுதியில் வைரஸ் முதன்முதலில் கண்டறியப்பட்ட சீனாவுடன் தொடர்பு இல்லாத இடங்களில் வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளமை மற்றும் உயிரிழப்புக்கள் பதிவாகியுள்

## பாடசாலைச...

# காஸா எல்லையில் பாலஸ்தீன இளைஞன் சுட்டுப்படுகொலை

(காஸா)

காஸா எல்லைப் பகுதியில் குண்டு வைக்க முயன்றதாக குற்றம்சாட்டி பாலஸ்தீன இளைஞர் ஒருவரை இஸ்ரேல் இராணுவம் நேற்றுக்காலை சுட்டுக் கொன்றதோடு மேலும் மூன்று பாலஸ்தீனர்கள் காயமடைந்தனர். இவ்வாறு கொல்லப்பட்ட பாலஸ்தீனரின் உடலை இஸ்ரேல் இராணுவம் புல்டோசர் தகடினால் தூக்கி எடுத்துச் சென்றதாக சம்பவத்தை பார்த்தவர்கள் குறிப்பிட்டனர்.

இரு பாலஸ்தீனர்கள் எல்லை வேலியை அணுகி குண்டு வைக்க முயன்றதை அடுத்து அங்கு விரைந்த படையினர் இரு பாலஸ்தீனர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதில் காயமடைந்த இரண்டாவது பாலஸ்தீனர் உடன் அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு



கான் யூனிசில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிப்பட்டதாக பாலஸ்தீன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காயப்பட்டவரை வெளியேற்ற முயலும் போது இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் காயமடைந்ததாக காஸாவின் பாலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# ஈரானிய கப்பல்கள் குவை... நுழைவதற்கு தற்காலிக த...

(டெஹ்ரான்)

ஈரானிய கப்பல்கள் குவைத்திற்குள் நுழைவதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக சீனாவில் 2 ஆயிரத்து 592 பேர் உயிரிழந்தனர். 77 ஆயிரத்து 150 பேர் பாதிக்கப்பட்டனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் நோய் தாக்கம் காரணமாக ஈரானில் இதுவரை 8 பேர் உயிரிழந்தனர். 43 பேர் பாதிக்கப்பட்டனர்.


இதனால் கொரோனா வைரஸ்




# வெளிநாடு

# ...கை உலுக்கும் கொரோனா!
## ...ழப்பு 2,592 ஆக அதிகரிப்பு!

...கொரோனா வைரஸ் ...மேலும் 150 பேர் உயி...ில், பலி எண்ணிக்கை ...யர்ந்துள்ளது.





...எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கிறது.

இந்நிலையில் சீனாவில் மேலும் 150 பேர் கொரோனா வைரஸிற்கு பலியாகி உள்ளனர். இதன்மூலம் சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு பலியானோரின் எண்ணிக்கை 2,592 ஆக உயர்ந்திருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒட்டுமொத்தமாக 77 ஆயிரத்து 150 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக 409 பேர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டும் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் ஹூபெய் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இதற்கிடையே ஈரானிலும் கொரோனா வைரஸ் பரவி உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதால், அந்த நாட்டுடனான எல்லையை துருக்கி, பாகிஸ்தான் மற்றும் ஆர்மீனியா ஆகிய நாடுகள் மூடியுள்ளன.

ஆப்கானிஸ்தானும் பல்வேறு பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இத்தாலியில் 152 கொரோனா வைரஸ் நோயாளிகள் கண்டறியப்பட்டதால், ஐரோப்பாவில் சுகாதார அவசர நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## ...ரஸ் தாக்கம்; ...ர் உயிரிழப்பு!
### ...லைகள் மூடல்

...ளமை குறித்தும் உலக சுகாதார அமைப்பு கவலை வெளியிட்டது.

மேலும் இந்தத் தாக்கம் காரணமாக இத்தாலி அரசாங்கம் விளையாடும் நிகழ்வுகளை இரத்து செய்துள்ளதுடன் சில பிராந்தியங்களில் உள்ள பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா தாக்கத்தின் எதிரொலி
### பிராந்தியங்களை தனிமைப்படுத்திய இத்தாலி

(ரோம்)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் தொகையானது இத்தாலியில் 79 ஆக உயர்வடைந்துள்ளது. இதனால் அந்நாட்டு பிரதமர் கியிசெப் கோன்டே நேற்று முன்தினம் சனிக்கிழமை அவசரகாலத் திட்டத்தை அறிவித்தார்.


இத்தாலியில்இருவர்கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.



அதன்படி இத்தாலியின் லோம்பார்டி மற்றும் வெனெட்டோவின் வடக்கு பிராந்தியங்களில் உள்ள பல நகரங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் இந்த இரண்டு பிராந்தியங்களிலும் சுமார் 50 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதேவேளை கொரோனா பரவியுள்ள குறித்த பகுதிகளுக்கு சிறப்பு அனுமதியின்றி உட்புகவோ அல்லது வெளியேறவோ தடையும் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ...தவைத்திற்குள் ...கு தடைவிதிப்பு



பரவும் என்ற அச்சம் காரணமாகவே குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த தீர்மானமானது ஷூய்பா, டோஹா மற்றும் குவைத் துறை முகங்களை உள்ளடக்கியது என குவைத் துறைமுக ஆணையகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஒரு பகுதி இதுவென குவைத் துறைமுக ஆணையகத்தின் தலைவர் ஷேக் யூசப் அப்துல்லா அல் சபா தெரிவித்தார்.

இதேவேளை ஈரானுக்கான அனைத்து விமானங்களையும் நிறுத்தி வைப்பதாக குவைத் ஏயர்வேஸ் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா பரவல் அதிகரிக்க வாய்ப்பு
## எதிர்கொள்ளத் தயாராகுங்கள்
### ஜப்பான் பிரதமர் அரசாங்கப் பணிக்குழுவுக்கு உத்தரவு

(டோக்கியோ)

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் சாத்தியமிருப்பதை எதிர்கொள்ளத் தயாராகுமாறு ஜப்பானியப் பிரதமர் ஷின்ஸோ அபே அரசாங்கப் பணிக்குழுவுக்கு உத்தரவிட்டார்.

டயமண்ட் பிரின்சஸ் சொகுசுக் கப்பலில் இருந்த பயணி ஒருவர் உயிரிழந்துள்ளமையினைத் தொடர்ந்து அவர் இந்த உத்தரவினை பிறப்பித்தார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள டயமண்ட் பிரின்சஸ் சொகுசுக் கப்பலில் மேலும் 57 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டது.

இதன் காரணமாக குறித்த கப்பலில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 691 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி முறியடிக்க வேண்டிய முக்கியமான கட்டத்தில் நாடு இருப்பதாக பிரதமர் அபே தெரிவித்துள்ளார்.

கொரோனா ரைவஸ் பரவலைக்கட்டுப்படுத்தும்வழிமுறைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதன் பின்னரே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



எதிர்வரும் ஜூலை மாதம் ஜப்பானில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள சூழலில், கொரோனா வைரஸ் பரவலைக் கையாளும் முறை குறித்து அதிகளவில் கவனம் செலுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிநாடுகளுடன் இணைந்து
# எதிர்க்கட்சியினர் சூழ்ச்சி!
## பிரதமர் குற்றச்சாட்டு

(மாத்தறை)

**நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தால்தான் எதிர்க்கட்சியினர் வெளிநாடுகளுடன் இணைந்து சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டினார்.**



தெற்கு அதிவேகப் பாதையின் மாத்தறை முதல் அம்பந்தோட்டை வரையான பகுதி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். "முன்னாள் வெளிவிவகார அமைச்சரால் போடப்பட்ட முடிச்சுக்களை அவிழ்க்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு தற்போது இருக்கின்றது. இதனை மிகவும் இலகுவாக அவிழ்த்து விட முடியாது.

உலகில் எந்தவொரு நாடும் தமது நாட்டுக்கு எதிராகக் கொண்டு வருகின்ற தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்குவதில்லை. அதாவது தமது நாட்டுக்கு எதிர்ப்பு வருகின்றபோது எவரேனும் ஒத்துழைப்பு வழங்குவார்களா?

நாமும் அதற்கு ஆதரவு வழங்குவோம். அதனுடன் இணைவோம் என அவர்கள் ஜெனிவாவில் இணை அனுசரணை வழங்கியுள்ளார்கள்.

இந்நிலையில் இவ்விடயத்தில் முதற்கட்ட நடவடிக்கையாக, அந்த இணை அனுசரணையில் இருந்து விலகுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார்.

மேலும் எதிர்க்கட்சியினர் ஜெனிவா சென்றாலும் இந்த நாட்டு விகாரைகளுக்குள் கூட அனுமதிக்க முடியுமானவர்களா? என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.நா. பிரேரணையிலிருந்து வெளியேறி தப்பித்துவிட்டதாக நினைக்கக்கூடாது
## அரசை எச்சரிக்கிறார் கருணாகரம்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய பிரேரணையில் இருந்து வெளியேறினால் அதிலிருந்து தப்பிவிட்டதாக இலங்கை அரசு நினைக்கக்கூடாது என கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொருளாளருமான கோவிந்தன் கருணாகரம் எச்சரித்தார்.

அத்துடன், இராணுவத் தளபதிக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை எதிர்காலத்தில் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கை அரசாங்கத்துடன் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஆனால் எந்தவித பலனும் கிடைக்கவில்லை.

அந்த வகையில் சர்வதேசத்தின் அனுசரணைய்யை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அணுகிய தன் பயனாக ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணையகத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஒரு புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த போது 2015 ஆம் ஆண்டு 30/1 என்ற தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டது.




30/1 என்ற தீர்மானம் இலங்கையின் அனுசரணையுடன் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் எந்தவித எதிர்ப்புக்களுமின்றி ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

கால அவகாசத்தின் பின்னர் 2021 ஆம் ஆண்டிற்கிடையில் அந்தத் தீர்மானம் முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்நேரத்தில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 30/1 என்ற தீர்மானத்திலிருந்து தாங்கள் விலகுவதாக அறிவித்திருக்கின் றார்.

இவ்வாறிருக்க, புரையோடிப் போயுள்ள நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள்ளே அதிகூடிய அதிகாரப்பரவலாக்கலை எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன், போர்ச் சூழலின் போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் வேண்டும். போர்க் குற்றவாளிகள் அடையாளங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்தைக் கேட்டு நிற்கின்ற இந்நேரத்தில் இலங்கையின் இராணுவத் தளபதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அமெரிக்கா பயணத்தடையை விதித்திருக்கிறது.

இந்நேரத்தில் இலங்கை அரசாங்கம் 30/1 என்ற தீர்மானத்திலிருந்து வெளியேறுவதாக அறிக்கை விடுவதன் மூலம் இதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது. இன்று இராணுவத் தளபதிக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை எதிர்காலத்தில் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

2015 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் வழங்கிய ஒத்தாசைப் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும். ஆனால் தீர்மானத்திலிருந்து விலகும் பட்சத்தில் எங்களுடைய மக்களின் நிரந்தரமான, நிம்மதியான வாழ்விற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு அழுத்தங்களை கொடுக்கத் தயாராக இருக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிம்மதி

கடற்கரை ஓரமாக ஒரு பெரியவர் கையாலே மணலைக் கீறிக் கொண்டே உட்கார்ந்திருந்தார். எதையோ தேடிக்கொண்டிருப்பது போல் தெரிந்தது. மெதுவாக அருகில் போய் எதைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் சாவகாசமாக என்னை நிமிர்ந்து பார்த்து நிம்மதியைத் தேடிக்கொண்டிருக்கிறேன் என்றார். நான் ஒரு மாதிரி ஆகிவிட்டேன். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, சேர் மணலில் கிளிஞ்சல்தான் கிடைக்கும். நிம்மதி கிடைக்காது என்றேன்.

சரி இன்றைக்கு வசமாக என்னிடம் ஒரு ஆள் மாட்டிக் கொண்டார் என்று நினைத்து அவர் பக்கமாகப் போய் உட்கார்ந்து கதை சொல்ல ஆரம்பித்தேன். ஒரு பெரிய ராஜா இருந்தார். அவருக்கு எல்லா வசதியும் இருந்தது. இருந்தாலும் ஒரே ஒரு குறை. அது என்னவென்றால் நிம்மதி இல்லாத குறை.

அரண்மனையிலே தினமும் கலை நிகழ்ச்சி, நாட்டியம் எல்லாமும் நடந்து கொண்டேதான் இருந்தது. இருந்தாலும் நிம்மதி இல்லை. சரி நிம்மதி எங்கே கிடைக்கும்? என்று தேட ஆரம்பித்தார். உடனே அதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கினார்.

நாட்டிலே உள்ள தத்துவ மேதைகளையெல்லாம் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னார். எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பார்த்து, நிம்மதி எங்கே இருக்கு? என்று விசாரித்தார். அவர்களுக்கு அது தெரிந்தால் ஏன் இப்படி ராஜாவுக்கு முன்னாள் வந்து நிற்கிறார்கள்?

ராஜாவுடைய கேள்விக்கு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார்கள். எந்தப் பதிலும் ராஜாவுக்கு திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இல்லை. சரி போயிற்று வாங்க என்று சொல்லி அவர்களையெல்லாம் அனுப்பி வைத்துவிட்டார்.

ஒரு நாள் அவர் மாளிகையிலே உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே தெருவிலே யாசகன் ரெம்ப உல்லாசமாக பாட்டுப் பாடிக்கொண்டே போய்க்கொண்டிருந்தான். குரலில் ஒரு சந்தோசம். நடையிலே ஒரு மிடுக்கு. அவனிடம் கொஞ்சம் கூட கவலை இருக்கிறதாகத் தெரியவில்லை.

உடனே ராஜா இதைப் பார்த்தார். ஏவலாளிகளை கைதட்டிக் கூப்பிட்டார். உடனே ஓடிப்போய் அந்த யாசகனை இங்கே அழைத்துக் கொண்டு வாங்க என்று உத்தரவு போட்டார்.

இவர்கள் உடனே ஓடிப்போய் அவனைக் கூப்பிட்டார்கள். அரண்மனைக்கு வா என்றார்கள். அவன் வரவில்லை. அரண்மனைக்குள்ளே அடியெடுத்து வைக்க மாட்டேன் என்றான்.

ராஜாவிடம் வந்து விடயத்தைச் சொன்னார்கள். அவருக்கு ரெம்ப ஆச்சரியம். இப்படியும் ஒரு ஆள் இருப்பானா? என்று. சரி அவன் என்னதான் சொல்லுகிறான் என்று விசாரித்தார். இவர்கள் மறுபடியும் தெருவுக்குப் போய்க் கேட்டார்கள். என்னைப் பார்க்க வேண்டும் என்று ராஜா விருப்பப்பட்டால் அவரை வேண்டுமென்றால் தெருவுக்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டான். அதை வந்து ராஜாவிடம் சொன்னார்கள். அவருக்கு கோபம் வரவில்லை.

இவ்வளவு சுதந்திர உணர்வோடு இருக்கிறவன் சாதாரண ஆளாக இருக்க முடியாது என்று நினைத்தார். உடனே விரைவாக தெருவுக்கு வந்தார். யாசகனிடம் போனார்.

நீ கவலைப்படாமல் சந்தோசமாகப் பாடிக்கொண்டு போகிறாயே அது எப்படி முடிகிறது உன்னாலே? என்று கேட்டார்.ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? என்றான் அவன். அதுக்கில்லை... எனக்கு அரண்மனையிலே எல்லா சுகபோகங்களும் இருக்கு. இருந்தாலும் நிம்மதி இல்லை. இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

இந்த தேசத்திலே உள்ள அறிஞர்களையெல்லாம் கூப்பிட்டுக் கேட்டுப் பார்த்தேன். அவர்களுக்கு தெரியவில்லை. உன்னைக் கேட்டால் தெரியும் என்று நினைத்தேன். அதனால்தான் சந்திப்பதற்கு ஆசைப்பட்டேன். ஆனால் நீ வரமாட்டேன் என்று சொல்லி விட்டாயே என்றார்.

யாசகன் கடகடன்னு சிரிக்க ஆரம்பித்தான். மகிழ்ச்சிக்கும் உங்களுக்கும் தடையாக இருப்பது இந்த மாளிகைதான். இதை விட்டுவிட்டு வெளியே வந்து விட்டால் நிம்மதி தேடிக்கொண்டே வந்து விடும் என்றான். நான் அரசன், எனக்கென்று கடமைகள் இருக்கு... அதையெல்லாம் விட்டுவிட்டு எப்படி வரமுடியும்? என்றார் ராஜா.

இரண்டும் ஒரே நேரத்தில் கிடைக்கவேண்டும் என்பது முடியாத காரியம். உங்கள் சுகபோகத்துக்கு விலையாகத்தான் உங்கள் நிம்மதியைக் கொடுத்திருக்கிறீங்கள். என்னைப் பாருங்கள்...என்னிடம் ஒன்றும் இல்லை. அதனாலே எதுவும் போய் விடுமோ ஏன்ற பயமும் இல்லை. நிம்மதியாக இருக்கிறேன் என்றான் அவன்.

ராஜா உடனே சந்தோசப்பட்டு தன்னுடைய மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசு கொடுத்தார். அவன் சிரித்துக் கொண்டே அதை வாங்க மாட்டேன் என்றான். இதை நீங்க எனக்குக் கொடுப்பதனாலே எந்தப் பயனும் இல்லை. அதேநேரத்திலே அதை வாங்கிக் கொண்டால் அடுத்த விநாடியே என் நிம்மதி போய்விடும் என்றான். சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு சந்தோசமாக பாடிக்கொண்டே போய் விட்டான்.

நிம்மதி எங்கே இருக்கிறது என்பதையும் ராஜா தெரிந்து கொண்டார். அந்த இடத்திற்கு தன்னாலே போக முடியாது என்பதையும் புரிந்து கொண்டார். இப்படி இந்தக் கதையை கடற்கரை மணலைக் கீறிக்கொண்டிருந்த அந்தப் பெரியவரிடம் சொல்லி முடித்தேன். அவர் முகத்தில் ஒரு தெளிவு தெரிந்தது. என்னை நிமிர்ந்து பார்த்தார். ரெம்ப நன்றி சேர். இப்ப எனக்கு தெளிவாகத் தெரிந்து போய்விட்டது. நிம்மதி வேண்டும் என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று இப்ப நல்லா புரிந்துகொண்டேன் என்றார். என்ன புரிந்து கொண்டீர்கள்? என்றேன். இனிமேல் கடற்கரைக்கு வந்தால் உங்கள் கண்ணிலே படாத இடமாகப் பார்த்து உட்கார வேண்டும் என்று புரிந்து கொண்டேன் என்றார்.

# யாரும் எங்களை முன்னுக்கு அழைத்துச் செல்ல மாட்டார்கள்

# நாங்களாகவே எங்களை முன்னுக்கு கொண்டுவர வேண்டும்

## கூட்டுறவுத்துறை சார்ந்தோருக்கு வடக்கு ஆளுநர் அறிவுரை





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள், பிரிவுத் தலைவர்கள், சமாசங்களின் பிரதித் தலைவர்கள், திணைக்களத்தின் செயலாளர் மற்றும் ஆணையாளர், உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினர். கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டன.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பில் இருக்கக் கூடிய சிக்கல் நிலைகள் தொடர்பில் விரிவாக ஆளுநருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இச்சந்திப்பின்போது கருத்துரைத்த ஆளுநர், பல ஆலோசனைகளையும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பான வழிமுறைகளையும் எடுத்துரைத்தார்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு கூட்டுறவுத் திணைக்களங்களின் செயற்பாடுகள் மிக முக்கியமானவை. எனவே கூட்டுறவுத்திணைக்களங்களின் செயற்பாடுகளில் பாரிய அபிவிருத்தியை வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் நாம் காணவேண்டியது மிக அவசியமானது.

பாரிய செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி செயற்பாடுகள் சில இன்று இயங்கு நிலையற்று காணப்படுகின்றன. வடக்கின் மூலப்பொருட்கள் நாட்டின் இதர பாகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வடக்கு மக்களுக்கே விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிலையில் இருந்து நாம் மீள வேண்டும். எங்களுடைய உற்பத்தியின் முழுமையான பலனை முதலில் எமது மக்கள் அனுபவிக்க வேண்டும்.

யாரும் எங்களை முன்னுக்கு அழைத்துச் செல்லமாட்டார்கள் நாங்களாகவே எங்களை முன்னுக்கு கொண்டு வருதல் வேண்டும். எங்கள் பெறுமதியை நாங்களே கூட்டவேண்டும். எங்கள் பொருட்களின் பெறுமதி அதிகரிப்பை நாங்களே தீர்மானிக்க வேண்டும்.

வருடத்தில் அவ்வப்போது மேற்கொள்ளப்படக்கூடிய செயற்பாடுகளை விட வருடத்தின் 365 நாட்களும் இயங்கக்கூடிய திட்டங்களே எமக்குத் தேவையானவை. தனிப்பட்ட ஆற்றல்கள் மேம்படுத்தப்படாமை வியாபார உத்திகளை கொண்டு சரிவர இயங்காமை, கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் நட்டமடைவதற்கு காரணமாக உள்ளது.

மக்களின் பொருளாதாரம், வாழ்வாதாரம் என்பவற்றை உயர்த்த கிராமிய மட்டங்களில் உருவாக்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி பெரும் பங்காற்ற வேண்டும். குறித்த திணைக்களத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் அவர்களாகவே முயற்சித்து முன்னுக்கு வர வேண்டும்.

உற்பத்தி விநியோகம் மற்றும் விற்பனை நடைமுறைகளை மேம்படுத்த சர்வதேச நாடுகளில் பயன்பாடுகளில் இருப்பதை போன்று எமது நாட்டிலும் பயன்பாட்டில் இருக்கும் துணைச் சேவைகளின் வரப்பிரசாதங்களை, அனுகூலங்களை அதிகமாக பெறுவது தொடர்பில் சிந்தித்துச் செயற்படுமாறும், திணைக்களமாக வியாபாரம் செய்யாமல் வியாபார தந்திரோபாயங்களோடு போட்டித் தன்மைக்கு ஈடுகொடுக்கக்கூடிய நுட்பங்களை மேம்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் அறிவுரை வழங்கியதோடு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு குழுவை ஆரம்பித்து அந்தந்த பகுதிகளில் எடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் தொடர்பில் உதாரணமாக இயங்காது இருக்கின்ற ஆலைகளை மீள இயங்க வைப்பது போன்ற விடயங்களுக்கான தீர்வுகளை இரு வாரங்களுக்குள் ஆலோசனைகள் பெறப்பட்டு அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# வடக்கில் நுண்கடன் நெருக்கடிக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வழிமுறைகளும் அவற்றின் இற்றைப்படுத்தலும்

கடன் நெருக்கடிக்கெதிராக இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பரந்தளவிலான முன்னெடுப்புக்கள் மற்றும் பல்முனைகளைக் கொண்ட அணுகுமுறைகளின் விபரமும் இற்றைப்படுத்தலும் வரிசைப்படுத்தப்படுகின்றன.

**●வலுப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை வழிமுறைகள்:**

உதாரணமாக பி.ப 5 மணிக்கு பின்னர் வீடுகள் மற்றும் கிராமங்களிற்கு செல்வதனால் இடம்பெறும் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை இடைநிறுத்துதல் என்ற வடக்குக்கு மாத்திரமாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரை இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்படுவதுடன் கண்காணிக்கப்படுகின்றது. மேலும்,திடீர் தள பரீட்சிப்புகள் மூலம் நிதியியல் நிறுவனங்களின் கிளைகளை மேற்பார்வை செய்தல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**●புதிய கிளைகளைத் திறப்பதற்கான அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன:**

அதியுயர் வங்கி அடர்த்தி மற்றும் வடக்கிலுள்ள வங்கியியல் நிறுவனங்களுக்கிடையிலான கடுமையான போட்டி என்பவற்றைக் கருத்திற்கொண்டு வடக்கில் வங்கி மற்றும் வங்கியல் இலாப நிதி நிறுவனங்களின் புதிய கிளைகளுக்கான அனுமதி வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், வங்கிகளற்ற பிரதேசங்களை நோக்கிய கிளைகளின் சாத்தியப்பாடான இடமாற்றல்கள் வசதிப்படுத்தப்படுகின்றன. (வடக்கின் வங்கி அடர்த்தியானது 2017 இன் இறுதியிலுள்ளவாறான 23.0 இலிருந்து 2018 இறுதியில் 22.2 இற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.)

**●நுண்கடன்களின் பதிவழிப்பு:**

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நுண்கடன்களைப் பெற்ற பெண்களின் கடன்கள் நிபந்தனைக்குட்பட்டுப் பதி வழிக்கப்பட்டுள்ளன. (வடக்கில் ரூ. 145.59 மில்லியன் பெறுமதியான 5,181 கடன்கள் பதி வழிக்கப் பட்டுள்ளன)

**●படுகடன் நிவாரணி கடன்:**

அரச பாதீட்டு உதவியோடு 2019 டிசெம்பர் இறுதியில்,ரூ. 466.9 மில்லியன் பெறுமதியில் ரூ.20,000.00 மற்றும் 50, 000.00 பெறுமதியுடைய 23,345 அரவணைப்புக் கடன்கள் (இலகு கடன்கள்) கூட்டுறவுத் துறையினால் வழங்கப்பட்டதுடன், அவை தொடர்ந்தும் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**●உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களினைக் கட்டியெழுப்புதல்:**

அரச பாதீட்டு உதவியோடு ரூ. 457 பில்லியன் பெறு மதியுடைய, அதிகரித்த வேலைவாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட 50 கூட்டுறவுக் கைத்தொழில்களை கட்டியெழுப்பும் செயல்முறை நடைமுறையிலுள்ளது.

**●உதவிக்கரும பீடங்கள்:**

நிதி தொடர்பில் பொது மக்களை வழிநடத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் உதவிக் கரும பீடமொன்று தொழிற்பாட்டிலுள்ளதோடு வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைத்தலோடு வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கு பொருத்தமான தீர்வுகள் நபரிற்கு நபர் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்திலிருந்து தொலைவிலுள்ள மக்களிற்கு உதவுவதற்காக வடக்கின் ஒவ் வொரு மாவட்ட செயலகத்திலும் உப உதவிக் கருமபீட அலகு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

**● நிதி விழிப்புணர்வு பிர சாரங்கள்:**

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தினால் வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரசமற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வெகுசன ஊட கங்கள் மற்றும் பிறவழிகளைப் பயன்படுத்தி நிதி விழிப்புணர்வு பிரசாரங்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. அரசாங்க மற்றும் பிற துறை சார் அலுவலர்களிற்கு நிதி அம்சங்கள் குறித்தான பயிற்சிகள் பொதுமக்களை சென்றடையும் நோக்கோடு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. (2017தொடக்கம் 2019 வரையிலான காலப்பகுதியில் 21,355 வளர்ந்தோர் மற்றும் மாணவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்)

**●உச்சவட்டிவீத எல்லை நடைமுறைப்படுத்தபட்டது:**

2018 டிசெம்பர் 03 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நுண்கடன்கள் மீதான உச்சவட்டி வீத எல்லை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**●வாடிக்கையாளர் சாசனம் வெளியிடப்பட்டது:**

வாடிக்கை யாளர்களின் நலன்கள் மற்றும் உரிமைகளை பாதுகாத்தலைஉறுதிப்படுத்தும் விதத்தில் 2018 ஜனவரி 16 ஆம் திகதி வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிற்கு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பொன்று வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**●முன்மொழியப்பட்ட கடன் ஒழுங்குமுறை ஆணைய சட்டம்:**

கடன் ஒழுங்குமுறை ஆணைய சட்டம் முன்மொழியப்பட்டு அங்கீகாரத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**●வடமாகாண முதன்மைத் திட்டமொன்றிற்கான பொரு ளாதார அபிவிருத்திக்கட்டமைப்பு:**

இலங்கை மத்திய வங்கி" வடமாகாணமுதன்மைத் திட்ட மொன்றிற்கான பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பு" ஒன்றினை முன்வைக்க வசதிப்படுத்தியதுடன் ஒட்டுமொத்த வடபுலத்தின் நிலைத்த விருத்தியைக் கருத்திலெடுக்கும் அடிப்படைக் கட்டமைப்பாக இவ் அறிக்கை யானது 2019 பெப்ரவரி 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.

**●கிராமிய கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்தல்:**

கிராமிய படுகடன் முற்றும் கொடு கடன் தொடர்பிலான தற்போதைய தேவைகளைப் பதிலீடாகப் பூர்த்தி செய்வதற்காக வட மாகாணத்திலுள்ள கிராமிய கூட்டுறவு வங்கிகளின் தொழிற்பாடுகள், முறைமைகள் மற்றும் மனிதவளங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு வடக்கின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் வழிநடத்தப்பட்ட அவசியமான கூட்டு நடவடிக்கைகள் நடைமுறையிலுள்ளன.

| மாவட்டம் | கடன்பட்டோரின் எண்ணிக்கை | பதிவழிக்கப்பட்டகடன் முதல் (ரூபா) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1,196 | 29,594,089 |
| கிளிநொச்சி | 1,580 | 45,557,386 |
| மன்னார் | 670 | 17,428,161 |
| முல்லைத்தீவு | 458 | 17,259,539 |
| வவுனியா | 1,277 | 35,756,955 |
| மொத்தம் | 5,181 | 145,596,129 |

பா.சிவதீபன்
பிராந்திய முகாமையாளர்
இலங்கை மத்திய வங்கி
கிளிநொச்சி

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

04

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**பொருளாதார உட்கட்டமைப்பு சம்பந்தமாக நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள்**

**மாகாண வீதிகள்**

பாரிய நகரங்கள் மற்றும் வளர்ந்து வரும் நகரங்கள், பொருளாதார மையங்கள் மற்றும் கிராமிய மையங்களை இணைத்தல் மற்றும் அனைத்து துறைக்கும் பயனுறுதியுள்ள சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஒரு சிறப்பான வீதி வலயமைப்பை பராமரிப்பது இன்றியமையாததாகும். வீதி வலயமைப்பில் உள்ள தடைகளை நீக்குதல், பாலங்களை நிர்மாணித்து வீதி வலயமைப்பிலுள்ள இடையூறுகளை அகற்றுதல், கிராமிய மையங்களை அண்மிய நகரங்களுடன் அனைத்து காலநிலைக்கும் பொருத்தமான வீதிகளின் மூலம் இணைத்தல், வடிகாலமைப்பு முறைகளைப் பராமரித்தல் மற்றும் ஏனைய அவசியமான வீதியுடன் தொடர்புடைய கட்டமைப்புகளுக்கு நிதிகளானதுப் பயன்படுத்தப்படலாம். வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் மற்றும் விளைவுகளானது அவற்றினை அமுல்படுத்துவதற்கு முன்பு தெளிவாக உருவாக்கிக் கொள்ளப்படல் வேண்டும்.



**2019 நவம்பர் 14 ஆம் திகதி மாகாண சபைகளைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நிதி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடைபெற்று 2020 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் பட்ஜெட்டைத் தயாரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.**

**பெருந்தோட்டத்துறை உட்கட்டமைப்பு**

பெருந்தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு அவசியமான சமூக பொருளாதார உட்கட்டமைப்பு (மலசலகூட வசதிகள், பாதுகாப்பான குடிநீர் மற்றும் பெருந்தோட்ட வீதிகள் பராமரிப்பு) வசதிகளில் நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும்.

பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி கருத்திட்டங்களை தெரிவு செய்யும் போது பெருந்தோட்ட சமூகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய நடவடிக்கை திட்டத்தினை பின்பற்றுமாறு அறிவுறுத்துகின்றோம்.

**போக்குவரத்து**

இத்துறையானது பிரயாணிகளுக்கு சிறப்பான வசதிகளுடன் தரமான சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்துகின்றது. இச் செயன்முறையின் போது பிரயாணிகளுக்கு அவசியமான வசதிகளை மேம்படுத்தும் போது இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் சிறப்பான ஒருங்கிணைப்பு இன்றியமையாததாகும். மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் கீழ் பேருந்து நிலையங்களை நிர்மாணிக்கும் போது அதில் வியாபாரத்தளங்கள் மற்றும் விருந்தகங்கள் போன்ற வர்த்தக ரீதியான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாது. பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்துத் தரிப்பிடங்களை அமைப்பதற்கு செலவு குறைந்த ஒரே முறையான கட்டட முறைகளைப் பயன்படுத்துவது சிறந்ததாகும்.

**காணி**

உரிய சட்டங்களை உருவாக்குதல், நிறுவக தேவைகளுக்காக அரச காணிகளை ஒதுக்குதல் மற்றும் மாகாண மட்டத்தில் காணி வங்கியினை பராமரித்தல் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கங்களை பயன்படுத்தலாம். மேலும் அரசாங்கத்தின் காணிப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் நிதியினைப் பயன்படுத்தலாம்.

**விவசாயம்**

இத்துறை சார்பான உற்பத்தியுடன் பிரதானமாக தொடர்புபடுத்தக் கூடிய விடயமாக உணவு கைத்தொழில் காணப்படுகின்றது. விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் மற்றும் பயனுறுதியை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்தலாம்.

அவையாவன, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு வசதியளித்தல், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், பெறுமதி சேர்ப்பனவுக் கைத்தொழில்களை ஊக்குவித்தல், அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை குறைத்தல், கைவிடப்பட்ட வயல் நிலங்களில் மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்தல், மலர் செய்கை மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு, விவசாய வீதிகளைப் பராமரித்தல், மாகாண விவசாய பண்ணைகள் மற்றும் பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்துதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச சந்தையில் எமது விவசாய மற்றும் விவசாயக் கைத்தொழில் பொருட்களுக்கான போட்டித் தன்மையினை நிலைநிறுத்துவதையும் உறுதி செய்யும் வகையில் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**விவசாயத்துறை சம்பந்தமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு வசதியளித்தல், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், பெறுமதி சேர்ப்பனவுக் கைத்தொழில்களை ஊக்குவித்தல், அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை குறைத்தல், கைவிடப்பட்ட வயல் நிலங்களில் மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்தல், மலர் செய்கை மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு, விவசாய வீதிகளைப் பராமரித்தல் போன்ற விடயங்களை மாகாண சபை தனது நிதி ஒதுக்கீட்டில் கருத்தில் எடுக்க வேண்டுமென நிதி ஆணைக் குழு கூறுகின்றது.**

**கால்நடை**

இத்துறையின் நோக்கமானது மாகாணங்களில் பலமான மற்றும் பயனுறுதியுள்ள மிருகங்களின் தொகையொன்றை பராமரிப்பதனூடாக பால், முட்டை மற்றும் இறைச்சியின் நிரம்பலை அதிகரித்தலாகும். இதன்மூலம் மாகாணத்தின் போசாக்கு மட்டம் மற்றும் மக்களின் உயர் வருமானத்தையும் உறுதி செய்ய முடியும்.

இது தொடர்பில், இந்நோக்கத்தினை அடைந்து கொள்வதுடன், சிறப்பான கால்நடை மருத்துவ சேவ்வகளை உறுதி செய்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக ரீதியான பாற்பண்ணைகளை தாபிப்பதற்கு வசதியளித்தல், பெறுமதி சேர்ப்பு கைத்தொழில்களை ஊக்குவித்தல், மற்றும் பால் சேகரிப்பு நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களை உருவாக்குதல் மற்றும் செயற்கை கருவூட்டல் மூலம் கலப்பு இன மிருகங்களை பிரபல்யப் படுத்தல்.

**நன்னீர் மீன்பிடி**

மீன் உற்பத்தியை அதிகரித்தல், சந்தை வசதிகளை மேம்படுத்தல், அலங்கார மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல் என்பவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும். மீனவர்களுக்கு தேவையான தொழில்நுட்பங்களை தேசிய மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். கிராமிய மீனவர்கள் இத்துறையில் தொழில் முயற்சியாளர்களாக உருவாகுவதற்கு உதவும் வகையில் மீன்பிடி சங்கங்களை மற்றும் அவற்றின் முகாமைத்துவங்களையும் உறுதிப்படுத்தல் வேண்டும். உள்நாட்டு மீன் உற்பத்திகளைக் கொண்ட பெறுமதி சேர்ப்புக்கான கைத்தொழில்களை ஊக்குவிக்கும் திட்டங்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். மீன்பிடி சமூகங்களானது மீன்பிடி வள்ளங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு உதவியளிக்கப்படல் வேண்டும். இந்நடவடிக்கைகள் மூலம் கிராமிய மக்களின் மீன் நுகர்வு அதிகரித்து போசாக்கு தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**நீர்ப்பாசனம்**

தற்போதுள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் கீழுள்ள பயிர் செய்யக்கூடிய காணிகளுக்கு போதுமான நீர்ப்பாசனத்தை உறுதி செய்தல், நீர்ப்பாசன கட்டமைப்புக்களை நிர்மாணித்தல். முறையான நீர் முகாமைத்துவம் போன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு விவசாய சங்கங்களின் முழுமையான பங்களிப்பையும் கட்டாயம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ் அபிவிருத்தி முயற்சியானது பயனுறுதியுள்ளதாய் அமைய வேண்டுமாயின், புராதன நீர்ப்பாசன முறைமையின் மீது கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். நெல் வயல்களுக்கு மேலதிகமாக ஏனைய களப்பயிர்களுக்கும் தேவையான நீர்ப்பாசனத்தை சிறப்பான நீர் முகாமைத்துவத்தின் மூலம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு பயனுறுதியுள்ள நீர் முகாமைத்துவத்தின் அவ்சியத்தை எடுத்துக் கூறுவதற்கான பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

**கிராமிய அபிவிருத்தி**

கிராமிய வீதி அபிவிருத்தி, சிறிய பாலங்கள், மதகுகள், கிராமிய சந்தை வசதிகள், மயானங்கள், நூல் நிலையங்கள் மற்றும் சமூக குடிநீர் வழங்கல் திட்ட நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். கருத்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் அமுல்படுத்தலின் போது பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் சிறப்பான ஒருங்கிணைப்பினை பேணுதல் வேண்டும். புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைகளை தேடிக்கொள்வதற்கான உதவிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பவற்றுடன் நெருக்கமாகச் செயற்படுமாறு ஆலோசனை கூறுகின்றோம். இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும் போது கிராமிய மட்டத்திலான அரச சார்பற்ற நிறுவனாங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான சங்கங்களினதும் ஈடுபாட்டினை உறுதி செய்வதனூடாக இத் திட்டங்களின் நிலைபேற்றினை உறுதி செய்து கொள்ளலாம்.

**மாகாண சபை தனது வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் சிறப்பான கால்நடை மருத்துவ சேவைகளை உறுதி செய்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக ரீதியான பாற்பண்ணைகளை தாபிப்பதற்கு வசதியளித்தல், பால் சேகரிப்பு நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களை உருவாக்குதல் மற்றும் செயற்கை கருவூட்டல் மூலம் கலப்பு இன மிருகங்களை பிரபல்யப்படுத்தல், கிராமிய மீனவர்கள் நன்னீர் மீன்பிடித்துறையில் தொழில் முயற்சியாளர்களாக உருவாகுவதற்கு உதவும் வகையில் மீன்பிடி சங்கங்களை மற்றும் அவற்றின் முகாமைத்துவங்களையும் உறுதிப்படுத்தல், பயிர் செய்யக்கூடிய காணிகளுக்கு போதுமான நீர்ப்பாசனத்தை உறுதி செய்ய நீர்ப்பாசன கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் போன்றவற்றை கருத்தில் எடுக்கவேண்டுமென நிதி ஆணைக்குழு கூறுகின்றது.**

(தொடரும்)

# பெரும்பான்மை நாடுகளின் ஆதரவின்றி இலங்கையால் பிரேரணைகளிலிருந்து தன்னிச்சையாக விலகமுடியாது

## இராஜாங்க அமைச்சர் வாசுதேவ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டிருக்கும் அனைத்துப் பிரேரணைகளில் இருந்தும் தனித்து நீங்க முடியாது என்றும் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடனே விலக முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த 30/1 பிரேரணையை கடந்த அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர தன்னிச்சையாக கைச்சாத்திட்டார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

"அவ்வாறான பிரேரணைக்கு கைச்சாத்திடுவதாக இருந்தால் அந்த விடயம் தொடர்பாக அமைச்சரவைக்கு தெரிவித்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதுடன் நாடாளுமன்றத்திற்கும் அறிவித்திருக்க வேண்டும்.

ஆனால் அமைச்சரவைக்கும் தெரிவிக்காது, ஜனாதிபதிக்கும் அறிவிக்காமலே மங்கள சமரவீர இந்தப் பிரேரணையில் கைச்சாத்திட்டார். அத்துடன் கடந்த ஆண்டு ஜெனிவா மனித உரிமை பேரவையின்போதும் குறித்த பிரேரணையின் 40/1 இற்கும் கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்டது.

ஆனால் எமக்கு எதிராக யுத்தக்குற்றம் தெரிவித்து ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு பிரேரணை கொண்டுவந்த அமெரிக்கா, மனித உரிமை பேரவையில் இருந்து விலகியுள்ளது.

அவ்வாறான நிலையில் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிவந்த நாங்கள் பிரேரணையில் இருந்து நீங்குவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

இதில் கைச்சாத்திட்ட மங்கள சமரவீரவுக்கு பிரச்சினை ஏற்படலாம். ஏனெனில் அவர் இலங்கை அரசாங்கத்தின் அனுமதி இல்லாமலே அதில் கைச்சாத்திட்டிருக்கின்றார். அவர்களின் நடவடிக்கை தேசத்துரோக செயலாகும்" என மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாததால் 5 ஆயிரத்து 536 அதிபர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

தமிழ் மொழியில் சித்தியடையாததால் நாடளாவிய ரீதியில் 5 ஆயிரத்து 536 அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலிருக்கும் விடயம் தெரியவந்தது.

நாடாளுமன்றத்தின் கோப் குழு நடத்திய விசாரணைகளில் இந்த விடயம் தெரிய வந்தது.

2019 பெப்ரவரி 20 முதல் 2019 நவம்பர் 7 வரையான காலப்பகுதி தொடர்பான 42 விசாரணைகளின் அவதானிப்பு மற்றும் பரிந்துரைகளில் இந்த விவகாரமும் தெரியவந்தது.

அதிபர்களின் சேவையில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 536 ஆகும். தரம் I இல் 1,750 வெற்றிடங்கள், தரம் II இல் 1,868 வெற்றிடங்கள் மற்றும் தரம் III இல் 1,918 வெற்றிடங்கள் உள்ளன. சுற்றறிக்கை எண் 1/2014 இன் படி தமிழ் மொழி தேர்ச்சி பெறாதது அந்த வெற்றிடங்களை நிரப்பத் தடையாகவுள்ளது என்பது தெரியவந்தது. (இ-7)

# பயங்கரவாதத்திலிருந்து நாடுகளை பாதுகாக்க இணைந்து பணியாற்றுவோம்

## இந்தியாவில் ட்ரம்ப் பகிரங்க அழைப்பு



(டில்லி)

**இஸ்லாமிய பயங்கரவாதம் தான் உலகின் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. இதில் இருந்து நாடுகளைப் பாதுகாக்க இணைந்து பணியாற்றுவோம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்தார்.**

இரண்டு நாள் விஜயமாக நேற்றுத் திங்கட்கிழமை இந்தியா வருகை தந்துள்ள ட்ரம்ப் அகமதாபாத் கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நமஸ்தே ட்ரம்ப் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்தியாவிற்கு எப்போதும் உண்மையான நட்பு நாடாக அமெரிக்க விளங்கும் என உறுதியளித்தார்.

இந்தியாவை அமெரிக்கா நேசிக்கிறது எனவும் இந்தியா மீது அமெரிக்கா மதிப்புக்கொள்வதாகவும் தெரிவித்த ட்ரம்ப் இந்தியாவின் சிறந்த தலைவராக மோடி விளங்குவதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் தலைமையில் ஒவ்வொரு கிராமமும் மின்சார வசதியைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் மோடியின் தலைமையில் இந்தியா எந்தச் சாதனையையும் நிகழ்த்தும் எனக் கூறினார்.

70 ஆண்டுகளில் இந்தியா பொருளாதார வல்லரசு நாடாக மாறியுள்ளதாக தெரிவித்த அவர், உலகம் முழுவதும் வாழும் நடுத்தர மக்களின் தாயகமாக இந்தியா உருவெடுக்கும் எனவும் தெரிவித்தார்.

எல்லைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அனைத்து நாடுகளுக்கும் உரிமை உள்ளதாகவும் பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியாவுடன் இணைந்து அமெரிக்கா செயற்படும் எனவும் ட்ரம்ப் உறுதியளித்தார்.


அத்துடன் இந்தியாவிற்கான இராணுவ உதவிகளைத் தொடர்ந்து வழங்குவோம். இந்த பிராந்தியத்தில் தொடர்ந்து நல்லுறவு நீடிக்க அமெரிக்கா தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக இந்தியாவுடன் 3 பில்லியன் டொலர் மதிப்பிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் நாளை கையெழுத்திடவுள்ளதாகவும் ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பு 100 வீதம் அழிக்கப்பட்டுள்ளது. அதன் தலைவர் அல்பக்தாதி கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த ட்ரம்ப் தெற்காசியாவில் நிலவும் பிரச்சின்னைகளுக்கு தீர்வு காண அமெரிக்கா தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

# நாட்டை முன்னேற்றுவதற்கு எமது வளங்களே போதும்

## சரத் அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையின் வளங்களை முழுமையாக பயன்படுத்தினாலே நாட்டை முன்னேற்றிவிட முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.**

கண்டியில் செய்தியாளர்களுக்குக் கரத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த ஊடக சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது, "எந்த அரசாங்கமாக இருந்தாலும் புதிதாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

அரசாங்கத்துக்கு என ஒரு கட்டமைப்பு இருக்கிறது. இதற்கேற்ற வகையில் செயற்பட்டாலே பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

நாட்டில் இருக்கின்ற வளத்தை பயன்படுத்தினாலே போதும் என்பதுதான் எனது நிலைப்பாடாக இருக்கிறது.

எனினும், இவ்வாறு முழுமையாக இடம்பெறுகிறதா? என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகவே இருக்கிறது" என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# கொழும்பு துறைமுகத்தில் இரணைதீவு மீனவர்கள்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகளை நேரடியாகக் கண்டு அறிந்து கொண்டமை தமக்கு புதிய அனுபவமாக அமைந்துள்ளதாக தெரிவித்திருக்கும் இரணைமாதா நகர் கடற்றொழிலாளர்கள், இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

கொழும்பிற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட இரணைதீவு, இணைமாதா நகர் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 75 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் நேற்றுக் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு துறைமுகத்திற்குச் சென்று துறைமுகத்தின் செயற்பாடுளை அவதானித்தனர். (இ-7)



# சிறுவர் இல்லங்களை 3 கட்டங்களாக தரப்படுத்த உடனடி நடவடிக்கை

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

(கொழும்பு)

சிறுவர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக சிறுவர் இல்லங்களைத் தரப்படுத்துவதற்கான நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

3 கட்டங்களாக இடம்பெறவுள்ள இந்தத் தரப்படுத்தலில் 1 நட்சத்திரம், 2 மற்றும் 3 நட்சத்திரம் என்று வகைப்படுத்தப்படும் என்று அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித்த விதான பத்திரண தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான சிறுவர் இல்லங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக ஒரு நட்சத்திர சிறுவர் இல்லத்தை அடையாளப்படுத்துவதற்காக சிவப்பு நிறமும் 2 நட்சத்திர சிறுவர் இல்லத்துக்காக செம்மஞ்சள் நிறமும் 3 நட்சத்திர சிறுவர் இல்லத்துக்காக பச்சை நிறமும் பயன்படுத்தப்படவுள்ளது.

சிறுவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக சிறுவர் இல்லங்களில் இட வசதி கட்டில்கள், ஏனைய தேவைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி இந்த தரநிர்ணய சான்றிதழ் வழங்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# 2019 இற்கான பட்டியல் தயார் 2 இலட்சத்துக்கும் அதிகமான புதிய வாக்காளர்கள் இணைவு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் இறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு அந்தப் பட்டியலே பயன்படுத்தப்படுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்நிலையில், 2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் 2 இலட்சத்து 70 பேர் புதிய வாக்காளர்களாக இணைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்களில் தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறுபடும்.

அத்துடன் மார்ச் மாதம் முதலாம் திகதி நாடா ளுமன்றம் கலைக்கப்பட்டால் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 23 முதல் மே மாதம் 6ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பொதுத் தேர்தலை நடத்த முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

19 ஆவது திருத்தத்திற்கு அமைய நான்கரை ஆண்டுகளின் பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனா திபதிக்கு உள்ளது. இதனடிப் படையில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகா ரம் ஜனாதிபதிக்கு வந்து விடும்.

எவ்வாறாயினும் கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய சந்தர்ப்பத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலை யில் எதிர்வரும் மார்ச் மூன்றாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# என்னிடம் எந்தவிதமான அரசியல் நோக்கமுமில்லை

## பைஸர் வெளிப்படுத்தல்

(கொழும்பு)

என்னிடம் எந்தவித அரசியல் நோக்கமும் கிடையாது. மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதும் அவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதுமே என்னுடைய நோக்கமாகும். குறிப்பாக, மத்திய கொழும்பு வாழ் மாணவர்களின் கல்விப் பிரச்சினைகளை அறிந்து, அது தொடர்பில் தேவையான முழு அளவிலான முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுப்பதே எனது பிரதான குறிக்கோளாகும் என்று, முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு 12, ஹமீத் அல் ஹுஸைனி தேசிய பாடசாலையின் வருடாந்த மாணவர் சாதனையாளர் தினம், பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஏ.கே.பி. அதஹான் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு மாணவரும் கல்வியில் தேர்ச்சி பெறவேண்டும். சாதனை படைக்க வேண்டும். சிறந்த நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். எதனையும் செய்ய வேண்டும் என்ற துணிவு வர வேண்டும். ஒரு வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ அல்லது வேறு அரசியல் துறைகளிலோ இம்மாணவர்கள் வர வேண்டும் என்பதே எனது ஆசை.

இதனால்தான், எந்தவித அரசியல் நோக்கங்களையும் கருதாது, மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க முன்வந்துள்ளேன். விசேடமாக, மத்திய கொழும்பு வாழ் மாணவர்களுக்கு இதனைத் தொடராக செவ்வனே நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1986

### கோமதி




### வேணுகா

ஏன் மச்சான் பசங்க காதலிக்கிறேன்னு சொன்னவுடன் பொண்ணுங்க செருப்பை கழற்றுறாங்க?



ஆண்களின் இதயம் கோவில் மாதிரிடா அதுக்குள்ள போறதுக்கு முன் செருப்பை கழற்றுறதுதானே முறை...

### கமல்

உங்கள் கௌரவம்
வேறெங்கும் இல்லை;
உங்கள் நாக்கின்
நுனியில்
தான் உள்ளது!

### கௌசிகன்

அம்மாகிட்ட கோப்பி கேட்டவுடன் பால் வாங்கிட்டு வரச் சொல்லிட்டாங்க



எனக்கு கோப்பியே வேண்டாம்ன்னு சொல்லிட்டன்

### துசாரி

தொலைந்தவர்களை
தேடிச்செல்லலாம்.
விலகிச்
சென்றவர்களை,
நினைத்துக்கூட
பார்க்கக்கூடாது..

### சோமன்

உதிக்கும் போதும் மறையும் போதும் ரசிக்கும் உலகம் உச்சிக்கு வந்தால்



திட்டித்தீர்க்கும் சூரியனை மட்டுமல்ல மனிதனின் வளர்ச்சியையும்கூட!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெளிநாடுகளில் தஞ்சமடைந்த குற்றவாளிகள் அனைவரும் அச்சமின்றி நாடு திரும்புகின்றனர்

## அரச தரப்பு மீது ஐ.தே.க.சரமாரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் உரிய பொருளாதாரக் கொள்கையின்றி செயற்படுவதன் காரணமாகவே நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும, ஜனாதிபதித் தேர்தலில் செய்த தவறை மக்கள் மேலும் செய்யாமல் எதிர்வரும் பொதுத் தேர்தலில் விவேகத்துடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் உரிய பொருளாதார கொள்கையின்றிச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாகவே இன்று அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. எமது ஆட்சிக்காலத்தில் 52 நாட்கள் அரசியல் நெருக்கடி, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் போன்ற சம்பவங்களுக்கு மத்தியில் நாங்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை மக்களுக்குச் சுமை ஏற்படுத்தும் வகையில் அதிகரிக்கவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில்கூட சர்வதேச கடனைச் செலுத்த முடியாது என்று குறிப்பிட்டு இந்தியாவுக்கோ அல்லது ஏனைய நாட்டுக்கோ சென்று கையேந்தி நிற்கவில்லை. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியிடம் கடனைக் கட்டுவதற்காக 3 வருட கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்குமாறு கூறி யாசகம் பெற்று வந்துள்ளார்.

இந்நிலைமைக்கு ஒருபோதும் நல்லாட்சி அரசாங்கம் சென்றிருக்கவில்லை. எத்தனை சிக்கல்கள் வந்தபோதிலும் சர்வதேச நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய கடன்களை ஒழுங்கான முறையில் செலுத்தி வந்தது.

அத்தியாவசியப்பொருட்களின் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விட்டால், மகிந்த அதற்கு இந்தியாவின் விளைச்சல்கள் அறுவடை செய்யப்பட்டதன் பின்னர் அந்தப் பொருட்களை இந்தியப் பிரதமரிடம் கலந்துரையாடி பெற்றுக்கொண்டு உணவுப்பயிர்களுக்கான சலுகையை பெற்றுக்கொடுக்கலாம் என்று தெரிவிக்கின்றார். இவ்வாறு இந்தியப் பிரதமரின் உதவியை நாடவா? மக்கள் இவர்களுக்கு வாக்களித்தார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நியமனங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 24 ஆயிரம் பேரின் நியமனங்களை அரசாங்கம் தடுத்து வைத்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்போது அதற்கான நிதியும் ஒதுக்கிவைக்கப்படும்.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. இந்த அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ஐக்கிய தேசியக் கட்சியினதோ, ஐ.தே.க.கூட்டணியினரின் நலன்களுக்கோ முன்னெடுக்கப்படவில்லை. நாட்டு மக்களின் நலனுக்காகவே முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்குப் பெரிதும் ஆதரவளித்த அரச ஊழியர்கள் இன்று விமர்சிக்கப்படுகின்றனர். அவர்களுக்காக இந்த அரசாங்கம் எந்தவித நலனையும் பெற்றுக்கொடுக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் அரச ஊழியர்கள் சிந்திக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதிகளில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சிலருக்கு எதிராக வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் இவ்வாறு தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக குழுவொன்றை நியமித்துள்ளது. இது முறையற்ற செயற்பாடாகும். நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் வழக்கு விசாரணைகள் தொடர்பில் யாருக்கும் குழு அமைத்து ஆராய்ந்து பார்க்க முடியாது.

**இன்று வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள குற்றவாளிகள் அனைவரும் அச்சமின்றி நாடு திரும்புகின்றனர். வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த உதயங்க வீரதுங்க போன்றோர் இன்று நாட்டுக்கு திரும்பியுள்ளமைக்குக் காரணம் தற்போதைய அரசாங்கத்தில் தமக்கு இலகுவில் சட்டத்திடமிருந்து தப்பிக்கொள்ளலாம் என்ற அவர்களின் நம்பிக்கையேயாகும்.**

ஆட்சிக்கு வந்து மூன்று மாத காலமாகியுள்ள நிலையில் தாம் வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது இருக்கும் அரசாங்கம் தொடர்பில் மக்கள் நன்கு அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தொடர்ந்தும் பிழையை விடாது எதிர்வரும் பொதுத்தேர்தலிலாவது சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சந்திப் சமரசிங்க தெரிவிக்கையில்,

அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களுக்கான சலுகைகளைப்பெற்றுக் கொடுப்பதற்காகவும் தீர்மானமொன்றை எடுத்திருந்தால் நாங்கள் அதற்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருப்போம். ஆனால் குறைநிரப்பு பிரேரணை ஒன்றை கொண்டு வந்து அதன்மூலம் மேலும் கடனைப்பெறவே அரசாங்கம் முயற்சித்தது. இதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதி கொடுக்கமாட்டோம். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மக்களுக்கான சலுகையைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் எடுத்த முயற்சிக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று தெரிவித்தார். இவர்களால் முன்வைக்கப்பட்டிருந்த குறைநிரப்பு பிரேரணையில் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 100 நாட்களுக்குள் மக்களின் நலனுக்காக பல்வேறு சலுகைகளைப் பெற்றுக் கொடுத்திருந்த போதிலும் தற்போதைய அரசாங்கம் அதனைச் செய்யாமல் இருப்பதுடன், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றாமல் இருக்கின்றது. இந்நிலையில் ராஜபக்ஷக்களின் முன்னைய ஆட்சியில் எவ்வாறு செயற்பட்டார்களோ அதேபோன்றே தற்போதும் செயற்படுகின்றனர் என்பது தற்போது வெளிப்படையாகின்றது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பழைமையான கட்சி என்பதுடன், அது வரலாற்று சிறப்புமிக்கது. இவ்வாறான கட்சியையோ, அதன் சின்னத்தையோ விமர்சிப்பது தொடர்பில் எமக்கு விருப்பமில்லை.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் சின்னம் தொடர்பில் சட்ட சிக்கல்கள் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்துகொண்டு செயற்குழுவின் அனுமதியுடன் தேர்தலில் போட்டியிடுவோம். இந்நிலையில் மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நன்கு அவதானம் செலுத்தி சரியான தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரு குழுக்களுக்கு இடையில் மோதல்

## இளைஞன் உயிரிழப்பு

(எல்பிட்டிய)

எல்பிட்டிய பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் காயமடைந்தார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 27 வயது இளைஞன் ஒருவரே உயிரிழந்தார்.

இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடே மோதல் ஏற்பட்டமைக்கு காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்தது. குறித்த சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வருடாந்த மஹோற்சவம் ஆரம்பம்

(குப்பிழான்)

ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 நாட்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் திருமஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் வேட்டைத் திருவிழாவும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் சப்பறத் திருவிழாவும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஸ்ரீ புஷ்கரணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-18)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

கீரிமலை திருவருள் மிகு ஸ்ரீ மஹா முத்துமாரி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 நாட்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-5)



கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்:- செ.ரவிசாந்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 140 | 200 |
| தக்காளி | 150 | 120 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 110 | 90 | 120 |
| கோவா | 120 | 120 | 130 | 140 |
| கரட் | 160 | 250 | 250 | 250 |
| பூசணி | 60 | 100 | 90 | 120 |
| புடோல் | 80 | 150 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 190 | 280 | 260 | 200 |
| பாகற்காய் | 150 | 100 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 250 | 330 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 150 | 180 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 130 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 70 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 35 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 80 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50 | 40-70 |
| இராசவள்ளி | 160 | 150 | 130 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 100 | 110 | 200 |
| முள்ளங்கி | 80 | 40 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 110 | 100 |




# இட்லியைத் துரத்திய பாட்டி



ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு பாட்டி. அந்தப் பாட்டிக்கு இட்லி என்றால் ரொம்பப் பிடிக்கும்.

இட்லி சாப்பிடுவதுமட்டுமல்ல, இட்லி சமைப்பதும் அவளுக்குப் பிடிக்கும், அதை மற்றவர்களுக்குத் தருவது இன்னும் பிடிக்கும்.

பாட்டி தினமும் மாவை அரைத்துச் சுடச்சுட இட்லி செய்து எல்லாருக்கும் தருவார். அவர்கள் ருசித்துச் சாப்பிட்டுப் பாராட்டுவார்கள், 'உன்னை மாதிரி இட்லி செய்ய இன்னொருத்தர் பிறந்துதான் வரணும்!'

அந்தப் பாராட்டுகளைக் கேட்டுப் பாட்டி மனம் திறந்து சிரிப்பார். அவர்கள் தருகிற காசுகூட ரெண்டாம்பட்சம்தான்.

ஒருநாள், பாட்டி இட்லிகளைத் தட்டில் போட்டபோது, ஒரே ஒரு இட்லி மட்டும் கீழே விழுந்துவிட்டது. மறுகணம், அங்கிருந்து அது உருண்டு ஓடத் தொடங்கியது.

'ஏய், நில்லு, நில்லு' என்று கத்தியபடி அந்த இட்லியைத் துரத்தினார் பாட்டி.

அப்போது, திடீரென பூமி பிளந்தது, இட்லியோடு பாட்டியும் அதற்குள் விழுந்துவிட்டார்.

பூமிக்குக் கீழே, இட்லி தொடர்ந்து ஓடியது, பாட்டியும் துரத்தினார்.

சற்றுத் தொலைவில், சில சாமி சிலைகள் நின்றிருந்தன. பாட்டி முதல் சிலையிடம் கேட்டார், 'இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்துச்சா? நீங்க பார்த்தீங்களா?'

'ஆமா, பார்த்தேன்' என்றார் முதல் கடவுள், 'ஆனா, நீ அதைத் துரத்திகிட்டுப் போகாதே.'

'ஏன்?' 'அந்தப் பக்கம் ஒரு அரக்கி இருக்கா, அவ உன்னைத் தின்னுடுவா.'

'நான் அரக்கியைப் பார்த்து பயப்படமாட்டேன்' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து நடந்தார் பாட்டி.

சற்றுத் தொலைவில், அடுத்த சாமி சிலை வந்தது. அதனிடம் கேட்டார் பாட்டி, 'இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்துச்சா? நீங்க பார்த்தீங்களா?'

'ஆமா, பார்த்தேன்' என்றார் இரண்டாவது கடவுள். 'ஆனா, நீ அதைத் துரத்திக்கிட்டுப் போகாதே.'

'ஏன்?' 'அந்தப் பக்கம் ஒரு அரக்கி இருக்கா, அவ உன்னைத் தின்னுடுவா.'

'நான் அரக்கியைப் பார்த்து பயப்படமாட்டேன்' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து நடந்தார் பாட்டி.

சற்றுத் தொலைவில், அடுத்த சாமி சிலை வந்தது. அதனிடம் கேட்டார் பாட்டி, 'இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்துச்சா? நீங்க பார்த்தீங்களா?'

'ஆமா, பார்த்தேன்' என்றார் மூன்றாவது கடவுள். 'நீ சட்டுன்னு எனக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கோ.'

'ஏன்?' 'இதோ, அரக்கி வர்றா.'

இதைக் கேட்ட பாட்டி அந்தச் சாமிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டார்.

சில நிமிடங்களில், அந்த அரக்கி வந்தாள். அவள் பெரிய, பயமுறுத்தும் உருவத்தில் இருந்தாள். சாமி முன் வந்து கும்பிட்டாள். பிறகு, மூக்கை உறிஞ்சி, 'மனுஷ வாசனை அடிக்குதே' என்றாள்.

'அதெல்லாம் இல்லை' என்றார் கடவுள். 'நீ கிளம்பு!'

'கண்டிப்பா மனுஷ வாசனை அடிக்குது' என்ற அரக்கி, பாட்டியைப் பார்த்துவிட்டாள், 'அட, நீயா?' என்றாள்.

'என்னை உனக்குத் தெரியுமா?'

'உன் இட்லியைப்பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன்' என்றாள் அரக்கி. 'என்னோட வா!'

கடவுள் கேட்டார், 'நீ அவளைத் தின்னப்போறியா?'

'ம்ஹூம், என்னோட சமையல்காரியா வெச்சுக்கப்போறேன்' என்ற அரக்கி பாட்டியை ஒரு படகில் ஏற்றினாள். ஆற்றில் படகு சென்றது.

'இந்தச் சின்ன ஆத்தைக் கடக்கிறதுக்குப் படகு எதுக்கு?' என்று கேட்டார் பாட்டி. 'நீதான் அரக்கியாச்சே, என்னைத் தூக்கிட்டுத் தண்ணியில நடக்கமாட்டியா?'

'அச்சச்சோ, எனக்குத் தண்ணின்னா பயம், நீச்சலடிக்கவும் தெரியாது' என்றாள் அரக்கி.

சிறிது நேரத்தில் அவர்கள் அரக்கி மாளிகைக்குள் நுழைந்தார்கள். அங்கே இவளைப்போலவே இன்னும் பல அரக்கிகள் இருந்தார்கள்.

'இனிமே எங்களுக்கு நீதான் தினமும் சமைக்கணும்' என்றாள் அரக்கி.

'சமைக்கிறேன், ஆனா இவ்ளோ பேருக்குச் சமைக்க அரிசிக்கு எங்கே போறது?'

'இதோ' என்று ஒரே ஒரு அரிசியை எடுத்துக் கொடுத்தாள் அரக்கி.

'இந்த ஒரு அரிசி எப்படிப் போதும்?'

'இதைப் பாத்திரத்தில போட்டு இந்த மந்திரக் கரண்டியால ஒருமுறை கலக்கினாப் போதும் அது பாத்திரம் முழுக்க நிறைஞ்சுடும்' என்றாள் அரக்கி.

பாட்டி ஆச்சியத்துடன் சமையலறை சென்று ஒரு பாத்திரத்தில் அரிசியைப் போட்டுக் கலக்கினார். மறுகணம் அந்தப் பாத்திரம் முழுக்க அரிசி நிறைந்திருந்தது. அதை வைத்து ருசியாகச் சமைத்தார். அதை அரக்கிகள் தின்று தீர்த்தார்கள்.

சிலநாள் கழித்து, பாட்டிக்கு வீடு திரும்பும் ஆசை வந்தது. ஆனால் அரக்கியை மீறி எப்படிச் செல்வது என்று தெரியவில்லை.

மறுநாள், அரக்கி இல்லாத நேரத்தில் படகில் ஏறிப் புறப்பட்டார் பாட்டி. ஞாபகமாக அந்த மந்திரக் கரண்டியைத் தன் மடியில் செருகிக்கொண்டார்.

சிறிது நேரத்தில் அவர் நதியைக் கிட்டத்தட்ட கடந்துவிட்டார். அப்போது அரக்கி வந்துவிட்டாள். பாட்டி திகைத்தார். அரக்கி சத்தம் போட்டு எல்லாரையும் அழைத்தாள்.

இப்போது ஆற்றின் இருபுறமும் அரக்கிகள். ஆனால் யாருக்கும் நீச்சல் தெரியாது. அவர்களால் பாட்டியை நெருங்க இயலாது. பாட்டியாலும் கரையேற இயலாது.

அரக்கிகள் சட்டென்று குனிந்து ஆற்று நீரைக் குடிக்க ஆரம்பித்தார்கள்.

சில நிமிடங்களில் ஆற்று நீரை அவர்கள் முழுக்கக் குடித்துவிட்டார்கள். பாட்டியின் படகு சேற்றில் சிக்கிக்கொண்டது.

அரக்கிகள் கோபத்தோடு பாட்டியை நெருங்கினார்கள். பாட்டி இறங்கி ஓடத் தொடங்கினார்.

சேற்றில் பாட்டியின் கால் சிக்கிக்கொண்டது, தடுமாறி விழுந்தார்.

இதைப் பார்த்த அரக்கிகளுக்குச் சிரிப்பு தாங்கவில்லை. 'ஹாஹாஹா' என்று அவர்கள் வாய்விட்டுச் சிரிக்க, அவர்கள் குடித்த தண்ணீரெல்லாம்வெளியே வந்துவிட்டது. ஆறு மறுபடி ஓடத் தொடங்கியது.


சட்டென்று படகில் ஏறிக்கொண்டார் பாட்டி,. அரக்கிகள் நீரில் சிக்கித் தவிக்க, அவர்களுக்கு நடுவே படகைச் செலுத்தி மறுகரைக்கு வந்துவிட்டார். மளமளவென்று ஓடித் தன் வீட்டுக்குள் நுழைந்தார். அதே கணம் அந்தப் பள்ளமும் மூடிக்கொண்டது.

பாட்டியைப் பார்த்தவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். 'இவ்ளோ நாளா எங்கே போனீங்க பாட்டி? உங்க இட்லி சாப்பிடாம ரொம்ப கஷ்டப்பட்டுட்டோம்' என்றார்கள்.

'இதோ, வந்துட்டேன்' என்றார் பாட்டி. 'இனிமே உங்களுக்குமட்டுமில்லை, இந்த ஊருக்கே நான் இட்லி செஞ்சு போடுவேன்' என்றார் தன் இடுப்பிலிருந்த மந்திரக் கரண்டியைத் தொட்டுக்கொண்டு.

அன்று முதல், பாட்டியின் வீட்டில் அரிசியும் மற்றப் பொருட்களும் நிறைந்து வழிந்தன. தினமும் ஆயிரக்கணக்கானோர் அவர் தந்த இட்லியைச் சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்!

## வரைந்து பழகுவோம்



## விடுகதைகளும் விடைகளும்

- பொரி பொரித்தேன் பெட்டியில் வைத்தேன். விடிந்து பார்த்தேன் வெறும் பெட்டி இருந்தது.

  நட்சத்திரம்

- முதுகிலே இருப்பது கூடு - அது மீனாக்குட்டிக்கு வீடு.

  நத்தை

- வெயிலில் காய்வேன் மழையில் நனைவேன். அண்டி வந்தவர்க்கு அடைக்கலம் தருவேன்.

  குடை

- இத்தனூண்டு தண்ணிக்குள்ளே சித்திரப் பூ பூத்ததாம்.

  விளக்கு

- பெட்டியைத் திறந்தேன் கிருஷ்ணன் பிறந்தான்.

  வேர்க்கடலை

- அரியலூரு அம்மாமி அதிகப் பிள்ளைக்காரி, பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில் பலே கெட்டிக்காரி.

  கோழி

- நடலாம் பிடுங்க முடியாது - அது என்ன?

  பச்சைகுத்துதல்

கோபம் வந்துவிட்டால் நியாயங்கள் குழம்பிப் போவது வழக்கம் – நாமக்கல் கவிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா நோய் அகல இறைவனைப் பிரார்த்திப்போம்

கொரோனா வைரஸ் தொற்று நோயினால் சீன தேசம் பெருந்துயர் கண்டுள்ளது. நாளுக்கு நாள் நடந்தேறும் மரணங்களின் எண்ணிக்கை இதயத்தை எரிப்பதாக உள்ளது.

சீன அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் இறப்புக்களின் எண்ணிக்கையைவிட, கொரோனா தொற்றால் இறந்தவர்கள் அதிகம் என்ற ஊகங்களும் உண்டு.

எதுவாயினும் கொரோனா வைரஸ் தொற்றினால் சீன மக்கள் மரண துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

இதுதவிர, சீனாவில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று தென்கொரியாவையும் சென்றடைந்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதையும் சங்காரம் செய்யுமோ என்ற ஏக்கம் எல்லோரிடமும் இருக்கவே செய்கின்றது.

எனினும் நம் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்ற துணிச்சலில் அதன் தாக்கத்தை உணராதவர்களாக நாம் இருக்கின்றோம்.

இவற்றுக்கு மேலாக, உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடான சீனாவில் இத்தொற்று பரவியிருப்பதனால், அதன்மூலம் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகமாக இருக்கலாம் என்ற அச்சம் உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, சீன உற்பத்திப் பொருளாதாரத்தை நம்பி உலகில் பல நாடுகளின் பொருளாதார இயங்குதன்மை உள்ளது.

இந்நிலையில் சீன உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியவில்லை எனும்போது எத்தனையோ நாடுகளின் பொருளாதாரம் அதிரடியான வீழ்ச்சியை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆக, சீனாவைத் தாக்கியுள்ள கொரோனா வைரஸ்; அந்த நாட்டு மக்களின் உயிர்களைக் காவு கொள்வதுடன், உலகப் பொருளாதாரத்துக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகள் எவ்வளவுதான் விஞ்ஞான, மருத்துவ, தொழில்நுட்ப முன்னேற்றங்களை அடைந்திருந்தாலும் இயற்கையின் சீற்றம் அனைத்து விஞ்ஞான முன்னேற்றங்களையும் தகர்த்து, மெய்ஞானமே உயர்வானது என்பதை மனித சமூகத்துக்கு நினைவுபடுத்தி நிற்கிறது.

இங்குதான் நம்மால் முடியவில்லை எனும்போது இறைவனிடம் சரணடைவதே ஒரே வழியாகிறது.

ஆகையால் சீன மக்களுக்காக நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஆம், தத்தம் சமயம் சார்ந்து எந்த வழிமுறையில் இறைவனை நாம் வேண்டுதல் செய்ய முடியுமோ அந்த வழியில் இறைவனைப் பிரார்த்திப்போம்.

இறைவா! உன் திருவருளால் சீன மக்களைக் காத்தருள் என்று வேண்டுதல் செய்வோம். பிரார்த்தனைகள் நிச்சயம் அனைவரையும் காத்தருளும்.

# அரசிடம் முறையான செயற்றிட்டமில்லை; தொடர்ந்து பயணிக்க முடியாமல் போகும்

## பொதுத்தேர்தலில் வெற்றி நிச்சயம்- அகிலவிராஜ்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திடம் முறையான செயற்றிட்டம் இன்மையால் தொடர்ந்து பயணிக்க முடியாது என்று தெரிவித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் பொதுத்தேர்தலில் 90 ஆசனங்களை பெற்றுக் கொண்டாலே ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தை அமைக்க கூடியதாகவிருக்கும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்கு நனமை பயக்கும் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் வேண்டும் எனக் கூறிக்கொள்ளும் இந்த அரசாங்கம் தமக்கு ஏற்ற ஏனைய விடயங்களை அதே பெரும்பான்மை இல்லாமலேயே மேற்கொண்டு வருகின்றது.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நாட்டின் வளங்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் எமது ஆட்சிக்கும் இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்கும் இடையிலான வேறுபாட்டை நாட்டு மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளனர்.

நாம் ஆட்சிக்கு வந்த பிறகு மகிந்த அரசாங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு நாட்டு மக்களுக்கு தேவையான அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

100 நாள் வேலைத்திட்டத்தின் ஊடாக பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். அத்துடன், அத்தியாவசிய பொருட்களின் விலைக்குறைப்புகளை செய்திருந்தோம். அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்திருந்தோம்.

எனினும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளின் விளைவாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அத்துடன், அதனை நிவர்த்தி செய்ய எந்த நடவடிக்கையையும் அரசாங்கத்தால் மேற்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் நாம் ஆரமபித்த அபிவிருத்தி திட்டங்களை திறந்து வைக்கும் நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

ஆகவே , மக்கள் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் அனைத்து நடைமுறைகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் ஊடாக தமக்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ஆகவே இந்த அரசாங்கத்தினால் தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது. அதே வேளை வெளிநாடுகளுடனான நல்லுறவை பேண இந்த அரசாங்கத்தினால் முடியாது போயுள்ளது.

ஆகவே .இந்த அரசாங்கத்தை பொதுத்தேர்தலில் வெற்றி கொள்வது இலகுவான காரியமாகும் என அவர் தெரிவித்தார்.(இ-7)

## கட்சியிலிருந்து விலகியவர்களை இணையுமாறு ஹக்கீம் அழைப்பு

(கண்டி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிச்சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அழைப்புவிடுத்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 29 ஆவது பேராளர் மாநாடு, கண்டி- பொல்கொல்ல பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் மேலும் கூறியுள்ளதாவது,

"சரியாகவோ, பிழையாகவோ, தடுமாற்றத்தின் காரணமாகவோ அல்லது ஏனைய காரணங்களினாலோ கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களுக்கு மீண்டும் இணைவதற்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இந்த இயக்கத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்ற நாள்முதல் எவரையும் வலுக்கட்டாயமாக கட்சியிலிருந்து விலக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

எம்.சி.சி ஒப்பந்தம் தொடர்பில்

## முதற்கட்ட அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

(கொழும்பு)

மிலேனியம் சேலன்ச் கோர்பரேஷன் (எம். சி. சி.) ஒப்பந்தம் தொடர்பிலான முதற்கட்ட அறிக்கை பிரதமர் மகிந்தராஜபக்ஷவிடம் நேற்று குழுவின் தலைவர் பேராசிரியர் லலித சிறி குணருவன் கையளித்தார். ஜனாதிபதியிடம் முதற்கட்ட அறிக்கை கடந்த 17ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

எம். சி. சி ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்கு 2019 டிசெம்பர் மாதம் 18ம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனவரி மாதம் 01ம் திகதியில் இருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் விசேட துறைசார் நிபுணர்கள் நால்வரை உள்ளடக்கிய குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் பிரிவு பேராசிரியர் லலிதசிறி குணருவன் குழுவின் தலைவராகவும்., போக்குவரத்து அமைச்சின் முன்னாள் செயலாளர் டி.எஸ். ஜயவீர , ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயவர்தன, மற்றும் பட்டய கட்டிடக் கலைஞர் நாலக ஜயவீர ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக உள்ளடங்குகின்றனர். (ம)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மனிதர்கள் தங்கள் கடமைகளை மறந்து விடுகிறார்கள். ஆனால் உரிமைகளை மட்டும் நினைவில் வைத்துக் கொள்கிறார்கள். - இந்திரா காந்தி

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை, வெளிச்சவீடு, முதலாம் குறுக்குத்தெரு, 2ஆம் குறுக்குத்தெரு, 3ஆம் குறுக்குத்தெரு, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிட்டெட் கற்கோவளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சாம்பல் தோட்டம், மூன்றுமுறிப்பிலிருந்து பூஓயா வரை, **Gowloom Garments,** ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், **SLBC** ஈரப்பெரியகுளம யோசப் படை முகாம், மூன்று முறிப்பு இராணுவ முகாம், **Air Point Joint Service Army Camp, BOO Xah, Recbo North** ஆகிய பிரதேசங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிலாவத்துறை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உலகத் துன்பத்திலிருந்து விடுபட...



தானாகப் பாய்ந்து செல்லும் நீரோட்டம் ஓரிடத்தில் சுழலை உண்டாக்குகிறது. சிறிது நேரம் அந்தச் சூழலில் இருந்துவிட்டு அதிலிருந்து வெளிப்பட்டு மீண்டும் சுதந்திரமாக தடையில்லாமல் தன் போக்கில செல்கிறது. ஒவ்வொரு மனித வாழ்வும் அந்த நீரோட்டம் போன்றவை தான்.

தேச, கால நிமித்தமாகிய சுழலில் சிக்கி "என் தந்தை, என் சகோதரன்", "என் பெயர்", "என் புகழ்" என்றெல்லாம் கதறியவாறே அதில் சிறிது நேரம் சுழல்கிறது. இறுதியில் அதை விட்டு வெளியே வந்து தனது பழைய சுதந்திர நிலையைப் பெறுகிறது. உலகம் முழுவதும் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது.

நாம் இதை அறிகிறோமோ இல்லையோ உணர்கிறோமோ இல்லையோ நாம் எல்லோரும் இந்த உலகமாகிய கனவிலிருந்து விடுபடவே வேலை செய்து கொண்டிருக்கிறோம்.

உலகில் மனிதன் பெறுகின்ற அனுபவம் எல்லாம் அவனுடைய இந்தச் சூழலில் துன்பத்திலிருந்து விடுபட வல்லவன் ஆக்குவதற்காக.

# அலன்ராஜ் - சுபாஸ்கர் இணைப்பாட்டம் கைகொடுக்க சம்பியனாகியது சென்றலைட்ஸ் அணி







அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் இறுதிபCRCபோட்டி கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இவ் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி, ஓல்ட் கோல்ஸ் அணியை 42 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை தம்வசமாக்கினர். முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 48.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களை பெற்றது.

சென்றலைட்ஸ் அணி 48.4 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 185 ஓட்டங்களை பெற்றது. சென்றலைட்ஸ் அணி 9 ஆவது விக்கெட் இழந்த நிலையில் 128 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அந்த நிலையில் அலன்ராஜ், சுபாஸ்கர் இருவரின் இணைப்பாட்டம் மூலம் 57 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

இவ்விணைப்பாட்டம் ஓர் சிறப்பு அம்சமாக கருதப்படுகிறது. பிரியலக்ஸன்-32, அலன்ராஜ்-48, சுபாஸ்கர் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பாக சிந்துஜன், ஜின்துசன், நிரோஸன், திலீபன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 34.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை பெற்றனர். மதுஸன்-41, பிரியலக்ஸன்-37, சிறிகுகன்-26, திலீபன்-16 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக அலன்ராஜ்-05, ஜெரிக்-03, ஜேம்ஸ்,டர்விக் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த வீரருக்கான 3 விருதுகளையும் சென்றலைட்ஸ் அணியை சார்ந்த அலன்ராஜ் பெற்றுக் கொண்டார்.

தொடரின் தொடர் நாயகனாக ஓல்ட்கோல்ஸ் அணியை சேர்ந்த பிரியலக்ஸனும் சிறந்த களத்தடுப்பாளராக வி.ஜிந்துஸனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். என்.சுதேஸ்குமார் வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார். (க)

# தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் போட்டி சம்பியனாகி அசத்தியது CRC அணி




மட்டுவில் வளர்மதி மைதானத்தில் இடம்பெற்ற தென்மராட்சி பிரதேச விளையாட்டு விழா 2020 இன் கிரிக்கெட் போட்டியில் சம்பியனானது CRC அணி போட்டியின் முதலாவது ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி அணியுடன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி 10 ஓவர்கள் முடிவில் 72 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய CRC 9.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்து 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

தொடர்த்து அரையிறுதிப் போட்டியில் றிபேக்ஸ்ரார் அணியுடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய றிபேக்ஸ்ரார் 9.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய CRC 7.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் நுழைந்தது.

இறுதிப்போட்டியில் நாவற்குழி சான்றோர் அணியுடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய CRC 10 ஓவர்கள் முடிவில் 82 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சான்றோர் 9.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 35 ஓட்டங்கள் மாத்திரம் பெற , 46 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியனானது CRC அணி. (க)

# சென்.அன்ரனீஸ் அணியை வென்று அடுத்த சுற்றில் குருநகர் பாடும்மீன்




யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் பாசையூர் சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. ஆட்டத்தின் முதற்பாதியின் போது ஒரு கோலையும் அடுத்த பாதியின் போது ஒரு கோலையும் போட்டு 2-0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. (க-106)

# விளையாட்டரங்கு திறப்பு விழா

சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தொடர்மாடி விளையாட்டு மைதானம் மற்றும் புதிய கலையரங்கம் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு தொடர்மாடி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர முதல்வரும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவருமான இம்மானுவல் ஆனல்ட் ,

அருட்பணி R.C.X. நேச ராசா அருட்பணி சார்ள்ஸ் யஸ்ரின், கௌரவ விருந்தினராக யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் து.ஈசன், யாழ். மாநகரசபை உறுப்பினர் செ.சத்தியசேகரன் கிராம உத்தியோகத்தர் சு.சல்பீர் .அ.க.ஏணஸ்ற் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-106)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## பாணின் விலை...

இதற்கமைய பாண் உள்ளிட்டவைகளின் விலையை 5 ரூபா யால் குறைக்க இச்சங் கம் தீர்மானித்துள்ளது.

இன்று 25ஆம் திங்கட்கிழமை தொடக்கம் இந்த விலை குறைப்பு அமுல்படுத்தப்படுமென, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## கொழும்பில் குவி...

முதல் அமுலுக்கு வரும் வகையில் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் மிகவும் நெரிசலான நுழைவு / வெளியேறும் இடங்களில் இராணுவ பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

பதில் பாதுகாப்பு தலைமை பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவினது வழிகாட்டலின் கீழ் கொழும்பு நகரத்தினுள் வாகன நெருக்கடிகளை குறைப்பதற்காக இலங்கை பொலிஸாருக்கு உதவும் நோக்கத்துடன் இராணுவ பொலிஸாரை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## மகளிர் தினத்தை...

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உறவுகள் இந்த கோரிக்கையை விடுத்திருந்தனர்

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க இணைப்பாளர் ம.ஈஸ்வரி தெரிவிக்கையில்..

இன்று (நேற்று) ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் தொடங்கியுள்ளது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தீர்மானம் எடுத்துள்ளோம். ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரில் ஏற்கெனவே எங்கள் அரசியல் பிரதிநிதிகள் போய் இரண்டு ஆண்டுகள் கால நீடிப்பு கொடுக்கப்பட்டு எங்களுக்கான தீர்வுகள் எவையும் கிடைக்காத நிலையில் நாங்கள் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் புதிய அரசு வந்துள்ளது.

புதிய ஜனாதிபதியிடம்தான் போர் நிறைவுபெற்ற காலத்தில் இருந்து பிரச்சினையினை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். புதிய அரசாங்கம் ஐ.நா கொடுத்த கால எல்லையில் இருந்து விலகிக் கொள்கின்றோம் என்று அரசு அறிவித்துள்ளமைக்கு இணங்க நாங்கள் சொல்கின்றோம் அரசு விலகினால் என்ன விலகாட்டில் என்ன கால நீடிப்பு கொடுத்தவர்களை சேர்த்துதான் சொல்கின்றோம்.

இந்த அரசால் எங்களுக்கு எந்த தீர்வும் வராது. காலநீடிப்பு கொடுத்தும் அரசாங்கம் விலகிக் கொள்கின்றது என்றால் குற்றம் புரிந்தபடியால்தான் விலகிக்கொள்கின்றார்கள். ஐ.நா கூட்டத் தொடரில் எங்களுக்கான உண்மையான தீர்வினை பெற்றுத்தர வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது. இன்றும் எங்கள் உறவுகள் பிள்ளைகளுக்காக உறவுகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றார்கள். மார்ச் 8ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு துக்கநாளாக போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார். (ம-281)

## கிராமசேவகர்...

கிராமசேவகர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அளவெட்டி தெற்கை சேர்ந்த சிறில் ரவிநேசன் (வயது - 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 21ஆம் திகதி அன்று தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்

இது தொடர்பான மரண விசாரனையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரனை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-18)

## தம்புள்ளைக்கு...

ஆறு கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதாக சங்கானை மதுவரி திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருந்து கஞ்சா கடத்தப்படுவதாக மதுவரி திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதியிலிருந்து தம்புள்ளைக்கு மரக்கறி ஏற்றிச் செல்வதற்காக காத்திருந்த லொறி ஒன்றை மதுவரி திணைக்களத்தினர் சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது கடத்துவதற்கு தயாராக இருந்த ஆறு கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-60)

## இராணுவத்தின...

வுத்துறையின் கண்காணிப்பின் கீழ் இருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் முன்வைத்த குற்றச்சாட்டுகளை பாதுகாப்பு அமைச்சு கடுமையாக மறுத்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள தமது புதிய அறிக்கையில், 2019 நவம்பர் மாதம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதிலிருந்து, இலங்கை பாதுகாப்புப் படைகள் மற்றும் உளவு அமைப்புகள் வலிந்து காணாமல் ஆக்கபட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்கள் மீதான கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்களை தீவிரப்படுத்தியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டுகளை பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன மறுத்துள்ளதுடன், வழக்கமான பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை தவிர, பாதுகாப்புப் படைகள் மற்றும் புலனாய்வு அமைப்புகள் எந்தவொரு கண்காணிப்பு பணிகளிலும் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போனவர்களின் உறவினர்கள் எவரையும் நாம் மையமாக கொண்டு செயற்படவில்லை. அந்த குடும்பங்கள் குறித்து கண்காணிக்க ஆயுதப்படைகளையோ உளவுத்துறையையோ நாங்கள் பயன்படுத்தவில்லை.

பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுகின்றனர். ஆனால் இலங்கையில் எந்தவொரு குறிப்பிட்ட குழுவினரையும் குறிவைத்துச் செயற்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களுடன் வடக்கு மற்றும் கிழக்கில் ஆறு இடங்களில் பணிபுரியும் ஆர்வலர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் அரசாங்கத்தின் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் கணிசமான அளவில் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் மீது நாங்கள் குறி வைத்திருக்கவோ அல்லது அவர்களை மிரட்டும் செயற்பாடுகளிலோ நாங்கள் ஈடுபடவில்லை.

ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் அமர்வுகளை குறிவைத்து அரசாங்கத்தை இழிவுபடுத்துவதற்காக நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக இந்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தபட்டுள்ளன என்று கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்கள் போன்ற பயங்கரவாத சம்பவங்களைத் தடுக்க, தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, எதிர்கால பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுகளால் தனித்து செயற்பட்டு வந்த முழு உளவுத்துறையும் ஒரு வலுவான வலையமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

காணாமல்போனவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் இலங்கை பாதுகாப்புப் படைகள் மற்றும் புலனாய்வு அமைப்புகளால் மிரட்டப்பட்ட தாகக் கூறியவர்களின் உண்மைத்தன்மையை சரிபார்க்குமாறு பாதுகாப்புச் செயலாளர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## இராணுவத்தின...

மருதனார்மடம், காங்கேசன்துறை வீதிப் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதிகளில் பல இளைஞர்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் கூடுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர்.

இராணுவத்தினர் முற்றுகையிட்டிருந்த விடுதியினுள் நுழைவதற்காக விடுதி உரிமையாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விடுதி நிர்வாகத்தினை மீறி உள்நுழைய முடியாமல் படையினர் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக அந்தப் பகுதியில் முற்றுகையில் ஈடுபட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரி வித்தனர்.

மிக நீண்ட போராட்டத்தின் பின்னர், விடுதியினுள் நுழைந்த படையினரால் அங்கு கூடியிருந்த 50 இளைஞர்கள் இராணுவ ட்ரக் வண்டியிலும் தனியார் வாகனங்களிலும் ஏற்றப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றுக்கு கூடியபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாள்வெட்டு மற்றும் கஞ்சா கடத்தலுடன் இவர்கள் தொடர்புபட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. (ம-10)

## மதவாச்சி குஞ்சு...

சாவடியில் வைத்து ஒரு தொகுதி கஞ்சா பொதிகளுடன் மன்னார் பகுதியை சேர்ந்த ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை மடு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகேந்திரா ரக வாகனத்தின் முன் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 6 பொதிகளைக் கொண்ட 12 கிலோ 640 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

குஞ்சுக்குளம் சோதனைச்சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களுக்கு அமைவாக விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை மடக்கி பிடித்து சோதனைக்கு உட்படுத்தியபோது குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதோடு குறித்த நபரும் கைது செய்யப்பட்டார். (ம-285)

## கொள்கை மற்...

நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று சிறந்த ஒரு எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிர்க்கட்சிக்கான கடப்பாடுகளை உரிய வகையில் மேற்கொள்ள முடியாது.

இன்று ஐக்கிய தேசிய கட்சிக்குள்ளேயே பல்வேறுபட்ட முரண்பாடுகள் நிலவுகின்றன.

கட்சியின் பெயர், சின்னம், பதவிகள் என்பன தொடர்பான முரண்பாடுகள் நிலவுவதாக பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

## இராணுவத்திடம்...

டாம் கட்ட வழக்கு விசாரணைகள், நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே. மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம)


மெகா பவர்
திகதி 2020/02/24
சீட்டிழுப்பு இலக்கம் 502
வெற்றி எழுத்து H சுப்பர் இலக்க 13 வெற்றி இலக்கங்கள் 22 31 55 68

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/02/24
சீட்டிழுப்பு இலக்கம் 1507
சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 05 55 62 66 முதல் போனஸ் இல 36 இரண்டாவது போனஸ் இல 40
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2020/02/24
சீட்டிழுப்பு இலக்கம் 4121
ஆங்கில எழுத்து H வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 2 0 0 0 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 24-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2402
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 40 44 49 57
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1133
சீட்டிழுப்பு திகதி 24.02.2020 திங்கட்கிழமை
V 05 30 52 56
2nd Chance 8 2 0 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,501,200
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.02.2020 வெற்றி வாரம் 2779 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் விருச்சிகம் 02 29 51 57
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000

டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 4097
ரூ.100 பரிசுக்குரிய 194
2020.02.25 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 893
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,659,235/-
வெற்றி இலக்கங்கள் 29 34 73 74 ஆங்கில எழுத்து P

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3305 திகதி: 2020.02.24
நீலம் திங்கட் கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 30 37 50 ஆங்கில எழுத்து V
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 34,822,870/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# யாழில் கிராம சேவையாளரிடம் பணம் பறிக்க மீண்டும் முயற்சி

## அவரின் சாதுரியத்தால் தப்பித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கிராம சேவையாளரிடம் மீண்டுமொரு ஈஸி காஸ் மோசடி மேற்கொள்ள முயற்சித்த போதிலும் அவர் சுதாகரித்துக்கொண்டதால் , மோசடி கும்பலிடம் ஏமாறாது தப்பிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது ,

அச்சுவேலி பகுதியை சேர்ந்த கிராம சேவையாளர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட நபர் ஒருவ்ர், தன்னை குற்றவியல் விசாரணைப் பிரிவின் (சிஐடி) பொலிஸ் பரிசோதகர் என அறிமுகப்படுத்திக்கொண்டு , " அச்சுவேலியை சேர்ந்த நபர் ஒருவரை கொழும்பில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்துள்ளோம். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அச்சுவேலியில் உள்ள அவரது வீட்டில் சோதனைகளை முன்னெடுக்க வந்துள்ளோம். அந்த வீடு உங்கள் கிராம சேவையாளர் பிரிவில்தான் உள்ளது. எமக்கு தற்போது அவசரமாக 5 ஆயிரம் ரூபாய் பணம் தேவைப்படுகின்றது. எனவே அருகில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்கு சென்று பணத்தினை ஈஸி காஸ் மூலம் அனுப்புமாறு கோரியுள்ளார்.

அந்த அலைபேசி அழைப்பு தொடர்பில் சுதாகரித்த கிராம சேவையாளர் அவர்களின் கதையை கேட்கும் எண்ணத்துடன் அருகில் இருந்த தொலைத் தொடர்பு நிலையத்திற்கு சென்று தனது தொலை பேசியில் உரையாடல்களை பதிவு செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டவாறு மோசடி கும்பலுக்கு அழைப்பை எடுத்து தான் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு வந்து விட்டேன் என கூறியுள்ளார்.

அதனை அடுத்து குறித்த நபர்கள் தமது பொலிஸ் உத்தியோகஸ்தர் அந்த கடைக்கு பணத்துடன் வந்து கொண்டு இருக்கின்றார். எனவே நீங்கள் 5 ஆயிரம் ரூபாயை இந்த இலக்கத்திற்கு போடுங்கள். அவர் உங்களுக்கு பணத்தினை வந்து தருவார் என கூறியுள்ளார்.

அதற்கு கிராம சேவையாளர் தன்னிடம் பணம் இல்லை என கூறிய போது , கடையில் உள்ளவரிடம் தொலைபேசியை கொடுக்குமாறு கூறி கடையில் நிற்கும் நபரிடம் பொலிஸ் உத்தியோகத்தர் பணத்துடன் வருகின்றார். நீங்கள் பணத்தை போடுங்கள் அவர் பணம் தருவார்' என கூறியுள்ளார். அதற்கு கடையில் நின்றவரும் முதலாளி வெளியே போயுள்ளார். என்னிடம் பணம் இல்லை. பொலிஸ் உத்தியோகத்தர் பணம் தந்ததும் உடனே போட்டு விடுறேன் என கூறினார்.

அதற்கு போதைப்பொருளை கைப்பற்ற வந்துள்ள ஏங்களுக்கு உதவவில்லை எனில் உங்களையும் கைது செய்வோம் என மிரட்டியுள்ளார். அதற்கு கடையில் உள் ள நபர் தன்னிடம் பணம் இல்லை என கூறிய போதும் உங்களை கைது செய்ய வேண்டி வரும் என மிரட்டியுள்ளார்.

அவர்களின் மிரட்டல்களை அடுத்து உசார் அடைந்த கிராம சேவையாளர் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான மேரசடிகள் தொடர்பில் நாங்கள் அறிந்துள்ளோம் என கூறியதும் அவர்கள் அழைப்பை துண்டித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக ஈஸி காஸ் மூலமான பண மோசடிகள் அதிகரித்து காணப்படுகின்றன. கடந்த சனிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர்கள் இருவரிடம் 50 ஆயிரம் ரூபாய் வரையில் மோசடி செய்திருந்தனர். அதேவேளை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடமும் மோசடி செய்யப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

### சஜித்தின் கருத்து

# கூட்டமைப்பு ஏமாற்றம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்த பயணத் தடை குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்த கருத்துக்களால் ஏமாற்றமடைந்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் உத் தியோகப்பூர்வ டுவிட்டர் பதிவில் இவ்வாறு ' தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் 85% வாக்குகளைப் பெற்ற பின்னரும், " பாரபட்சமின்றி நீதியை மட்டுமே எதிர்பார்க்கும் தமிழ் மக்களின் அடிப்படை நிலைப்பாட்டை பிரேமதாச பாராட்டவில் லை என்பது ஏமாற்றமளிக்கிறது என்றுள்ளது.

(ம)


**பழைய ஓடுகள் விற்பனைக்கு**

51, பலாலி வீதியில் அமைந்துள்ள வீட்டில் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:- (2374)

0774161034/0774003672

**உதவியாளர் தேவை**

சிற்றுண்டி வகைகள் செய்வதற்கு பெண் உதவியாளர்கள் தேவை.
(கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், இருபாலை போன்ற இடங்களை அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்புகளுக்கு:- (2372)

076 833 3259

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு



UK - 550*/= Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS (C-8785)

**பணியாளர் தேவை**

மானிப்பாயில் உள்ள பிரபலமான புடைவைக் கடையில் வேலை செய்வதற்கு ஆண்/பெண் இருபாலாரும் (அனுபவமுள்ள/பழகவிரும்பும்) உடனடியாகத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும் (C-9321)

தொடர்பு:- 077 560 4057

யாழ்.வீதி, மானிப்பாய்.

**வேலையாள் தேவை**

நெல்லியடியில் இயங்கும் உணவகத்துக்கு கொத்து, றைஸ் போடத் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-9322)

தொடர்புகளுக்கு:-

077 494 9212

**வேலைவாய்ப்பு**

யாழ்.மண்ணில் முதல் முறையாக கால்தடம்பதித்துள்ள எமது Any Buy நிறுவனமானது புதிய வேலைத் திட்டங்களுக்காக 08 விதமான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இதற்காக எதிர்பார்க்கப்படுவது யாதெனில் 18 - 45 வயதுக்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் 05.03. 2020க்கு முன்னராக உங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

தகைமைகள்:
◉ O/L, A/L பூர்த்தி செய்தவராகவும்
◉ தரம் 10 படித்தவர்களும் விண்ணப்பிக்க முடியும் (நிபந்தனைகள் உண்டு)

விண்ணப்பிக்க வரும்போது தே.அ.அ பிரதி, பிறப்புச் சான்றிதழ் மற்றும் சுயவிபரக்கோவையுடன் சமுகம் தரவும். (2375)

தொடர்புகளுக்கு:- 076 267 8131, 076 711 8479, 021 722 3317

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இருந்து இந்திய விபூதி 1kg பக்கற்றினை மொத்தமாக (Rs.100) இற்கும் சில்லறையாக (Rs.110) இற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் விபூதி, சந்தணம், குங்குமம், 25g பக்கற் முதல் 1kg பக்கற்வரை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- (C-9326)

சிவா நறுமணப்பூங்கா

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமையில்) தொ.பேசி: 0212222567

**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9293)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9946)

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை, றொட்டி வேலை தெரிந்தவர்கள் தேவை. (C-9392)

தொடர்புகளுக்கு:-

0777171545,0768783734

**கண்ணீர்அஞ்சலி**

எமது முன்னாள்
கோட்டக்கல்வி அலுவலர்
திரு.ச.சிவானந்தராசா
அவர்களின் அன்புத் தாயார்

அமரர்
செல்லம்மா சங்கரப்பிள்ளை



அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நவாலி தெற்கு அமெரிக்கன் மிசன்
தமிழ்க் கலவன் பாடசாலைச் சமூகம்

(C-9331)

**A/L பொருளியல்**

MCQ Book- ①②&③

முதல் நான்கு அலகுகளுக்குரியது

2ம் பதிப்பு

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் வினாத்தாள் அமைப்பு, புள்ளித்திட்டம்,நோக்கங்கள்,வினாவகைகள், முன்னோடி மாதிரிவினாத்தாள்,

1280 MCQs

சிறப்புக்குறிப்புகள், வழிகாட்டல்கள், குறிப்புகள் & பரீட்சை நுட்பங்கள் அடங்கியது

2015& 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்
2017,2018&2019 A/L பரிட்சையில் 100 புள்ளிகளும் 100/100
பெறவைத்த நூல்களின் ஆசிரியர்
வே. கருணாகரன்

ரூபா 480

(2377)

பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
விநியோகத்தர் : லங்கா புத்தகசாலை - கொழும்பு-12


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.